Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 15 | 28-04-2003 | திங்கட்கிழமை | ஓசை 69

மண விழாக்களை மகிழ்வுடன் கொண்டாட மனதிற்கினிய ஆடைத்தெரிவுக்கு

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா

T.P:24-22879

## தமிழினம் சுதந்திரமாக வாழ வேண்டுமென யாசித்தவர் ஆயர் தியோகுப்பிள்ளை

### -விடுதலைப் புலிகள் அஞ்சலி

ஆண்டகை தியோகுப்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி மக்களைக் கலங்கி நிற்கச் செய்துள்ளது. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஓர் உன்னத மகத்தான மனிதரை இழந்து நிற்கின்றது.

இவ்வாறு அரசியல்துறையினர் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதநேயம் மிக்கவர், அறிவாற்றல் உள்ளவர், தமிழ் மொழியின் பால் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர், தமிழினம் சுதந்திரமாக வாழ வேண்டும் என (10ஆம் பக்கம் பார்க்க )

## சுட்டுக்கொலை

(கொழும்பு)

தெகிவளைப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த லிங்கராசா தேவராசா (வயது-32) என்பவரே உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க )

## அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்த ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் அவரச கால நிலையைப் பிரகடனப்படுத்த சிறிலங்கா அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளும், சமாதான விரோதச் சக்திகளும் செயற்பட்டு வருவதால் அதனைக் கட்டுப் படுத்தும் நோக்கோடு இதனை மேற் கொள்வதற்கு அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு (10ஆம் பக்கம் பார்க்க )

# ஒருதலைப்பட்சமாகப் போரை ஆரம்பிக்கும் நோக்கம் எதுவும் புலிகளுக்கு கிடையாது!

### சண்டே லீடருக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**எமது அரசியல் ஆலோசகரும், பேச்சுவார்த்தைக்குழுவின் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கடிதத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பதிலை எதிர்பார்த்துள்ளோம். ஒருதலைப்பட்டசமான போரை ஆரம்பிக்கும் எண்ணம் விடுதலைப் புலிகளுக்குக் கிடையாது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக வன்னியிலும் யாழ். குடாநாட்டிலும் அரசு உறுதியளித்தது போல் மீள் கட்டுமானப் பணிகளை உடனடியாக ஆரம்பித்து இப்பகுதிகளில் வழமை நிலையைக் கொண்டு வரவேண்டும்.

வன்னியில் வறுமைக்கோட்டின் கீழ் முப்பது ஆயிரம் குடும்பங்கள் (10ஆம் பக்கம் பார்க்க )

## சில தினங்களில் புலிகளுக்கு அரசின் பதில் அனுப்பப்படும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சிறிலங்கா பிரதமருக்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கான பதிற்கடிதம் சில தினங்களுக்குள் பிரதமரினால் அனுப்பி வைக்கப் படும் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

சமாதானப் பேச்சுக்களில் இருந்து தங்காலிகமாக விலகிக் கொள் வதற்கான காரணங்களை உள்ளடக்கி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ரணில் விக்கிரம

(10ஆம் பக்கம் பார்க்க )

## அடுத்த மாதம் அகாஷி இல. வருகிறார்

இலங்கைக்கான ஜப்பானின விசேட தூதுவர் யசுகி அகாஷி எதிர்வரும் மே மாதம் 03 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சந்திரிகா, பிரதமர் ரணில், அமைச்சர் பீரிஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்களை இவர் சந்தித்துப் பேசவுள்ளார். அத்துடன் விடுதலைப்புலிகளையும்

(10ஆம் பக்கம் பார்க்க )

## சமாதானச் செயலகத்தை மறுசீரமைக்க அரசு முடிவு!

சமாதானச் செயலகத்தை உடனடியாக மறுசீரமைக்க சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

சமாதானச் செயலகத்தில் பணியாற்றுவோர் மாற்றப்படும் அதே நேரத்தில் இந்த செயலகத்தின் பணிகளும் மாற்றி அமைக்கப்பட (10ஆம் பக்கம் பார்க்க )

## சமாதானப் பேச்சுக்களின் அடுத்த கட்டம் குறித்து ஆராய்வு!

### - சமாதானச் செயலகம் தகவல்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அடுத்த கட்டம் குறித்து தீர்மானிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகக் கொழும்பிலுள்ள சமாதானச் செயலகம் அறிவித்துள்ளது.

பணிப்பாளர் நாயகம் பேணாட் குணதிலக கருத்து வெளியிடுகையில்; சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டதற்கான காரணங்களை தெரிவிக்கும் விடுதலைப் புலிகளின் கடிதத்தை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான வழிமுறைகள் எதுவும் கைவிடப்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

சமாதானச் செயலகத்துடன் (10ஆம் பக்கம் பார்க்க )

## ஆனையிறவுத்தள வெற்றிவிழா இன்று தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பம்

(அளம்பைகை செய்தியாளர்)

ஆனையிறவுப் பெருந்தள அழிப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும், தீச்சுவாலை முறியடிப்புத் தாக்குதலின் இரண்டாமாண்டு பெரு வெற்றி விழாவும் இன்று காலை 10.00 மணிக்கு பளைப் பகுதியில் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை பளைப் பகுதியில் இராணுவத்தின் ஆட்லறி நிலையங்கள் மீது கரும் புலித் தாக்குதல் மேற்கொண்டு வீரச்சாவைத் தழுவிய கரும்புலிகளான மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகியோரின் நினைவாக அவர்கள் வீரச்சாவைத் தழுவிய இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். மேற்படி தாக்குதலின் மூன்றாம் ஆண்டை நினைவுகூர்ந்து மரம் நடுகை இடம்பெறும் மாலை நூல் வெளியீடு, நடன நிகழ்வுகள், கவியரங்கம், ஒலிப்பேழை வெளியீடு, கவிதா நிகழ்வு கரை தேடும் ஓடங்கள் நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். இறுதியாக இசை நிகழ்வு இடம்பெறும். (லோ)



வெற்றிவிழாவுக்காக பளைப்பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ளது

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்தார்.

நாட்டுப்பற்றாளர் அன்னலிங்கம் வில்வலிங்கம் (முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம்) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## இல. கண்காணிப்புக் குழுவை வெளியேற்றக் கோரிப் போராட்டம்

### ஜே.வி.பி.நடத்தத் திட்டம்

போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரை இலங்கையைவிட்டு வெளியேற்றுமாறு கோரி ஜே.வி.பி. மறியற்போராட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவினர் இலங்கைக்கு மட்டுமன்றி முழு தெற்காசிய வலயத்துக்குமே அச்சுறுத்தலாக மாறியிருப்பதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். இந்த மறியற் போராட்டத்துக்கு எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெறும் நோக்குடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

### -கண்காணிப்புக்குழு தொடர்பான-

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு தமிழ்க்கூட்டமைப்பு கண்டனம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை தமிழ்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் ஒரு பக்க சார்பானவை என்றும் இதில் இந்தியா உட்பட மூன்று நாடு களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையானது சுயநலமும் சந்தர்ப்ப (10ஆம் பக்கம் பார்க்க )

# புளியம்போக்கணைப் பகுதியில் நெற்சூடு எரிந்து நாசம்

(கண்டாவளை)

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் நாகேந்திரபுரம் பகுதியில் நேற்று முன் தினம் தீயினால் நெற்சூடு எரிந்தது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; பரந்தன் 1ம் கட்டைப் பகுதியில் வசிக்கும் அருமைத்துரை என்பவர் புளியம்பொக்கணைப் பகுதியில் 4 ஏக்கர் நெல் அறுவடை செய்து வைத்திருந்த நெற்சூடே தீயினால் எரிந்து நாசமாகியதாகத் தெரியவருகிறது. சம்பவ தினம் நண்பகல் 12.30 மணியளவில் இனம் தெரியாதோரால் வயலுக்கு வைத்த தீ பரவி வந்ததாலேயே நெற்சூடு எரிந்ததுடன் அருகில் இருந்த வளவின் வேலி பத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் என்பன எரிந்து நாசமாகியன. வீடு கல்வீடாக இருந்தமையால் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# அரசியல், தனிப்பட்ட விருப்புக்களால் தேசிய பாடசாலை அமைப்பதில் பிரச்சினை!

## கல்வியமைச்சர் கூறுகிறார்

ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணாக அரசியல் மற்றும் தனிப்பட்ட விருப்பங்களின் பெயரில் தேசிய பாடசாலைகளை அமைப்பதனால் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். முல்லை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இதுவரை எந்தவொரு தேசிய பாடசாலையும் அமைக்கப்படவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் தேசியப் பாடசாலைகளை அமைப்பது தொடர்பாகச் சிறந்த திட்டம் ஒன்றை அமுல்படுத்துவது குறித்து ஆராயப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நிரந்தர வைத்தியசாலை உடையார்கட்டில் அமைக்கக் கோரல்

உடையார்கட்டில் அமைந்துள்ள தற்காலிக வைத்தியசாலையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் சிகிச்சை பெற்று வருவதாலும் இரவுவேளைகளில் அவசர நோயாளிகளின் தேவை கருதியும் நிரந்தரமாக இப்பகுதியில் ஒரு வைத்தியசாலையை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இக்கோரிக்கையானது அண்மையில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்திக் குழுக்களுக்கான ஒன்றுகூடலின் போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தயானந்தவிடம் மக்களால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (19)


# தமிழீழ போக்குவரவுக்கழக வைகாசி மாதத்திற்கான பருவகாலச்சீட்டு வழங்கல்

தமிழீழ போக்குவரவுக்கழகத்தினால் வழங்கப்படும் பருவகாலச்சீட்டு பின்வரும் தினங்களில் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| பேருந்து நிலையம், முல்லைத்தீவு | – | 28,29,30ம்நாள் |
| தமிழீழ போக்குவரவுக்கழகம்,புதுக்குடியிருப்பு | – | 28,29,30ம் நாள் |
| மகா வித்தியாலயம், பூநகரி | – | 28,29,30ம் நாள் |
| தமிழீழ போக்குவரவுக்கழகம், கிளிநொச்சி | – | 28,29,30ம் நாள் |
| பேருந்து நிலையம், முகமாலை | – | 28,29,30ம் நாள் |

பாடசாலை மாணவருக்கு 05.05.2003, 06.05.2003 நாட்களில் கல்விகற்கும் பாடசாலைகளில் பருவகாலச்சீட்டு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர்,
தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-7739)



## சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களின் அனுசரணை

ஆனையிறவு வெற்றியின் 3 ஆவது ஆண்டு தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் 2 ஆவது ஆண்டு நிறைவாகவும், தமிழீழ விளையாட்டுத் துறையால் 27.04.2003 அன்று நடாத்தப்பட்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்குரிய பரிசிற்கான அனுசரணை வழங்கிய,

1. சிவா றேடிங் கொம்பனி யாழ்.சாலை, கிளிநொச்சி.
2. தாசன் போட்டோ அன்வீடியோ இராமநாதபுரம்,வட்டக்கச்சி
3. கோபாலசிங்கம் கரும்புத்தோட்ட உரிமையாளர், கந்தபுரம்

ஆகிய தொழிலதிபர்களுக்கு தமிழீழ விளையாட்டுத் துறையினர் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(சி-7860)



# பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வாடியடி, பூநகரி. 26.04.2003

## வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

மேற்படி பூநகரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின், கிளைக்குழுத் தேர்தலை முன்னிட்டு, 31.03.2003 உடன் முடிவுறுத்தப்பட்ட கிளைகளுக்குரிய உறுப்பினர்கள் பதிவேட்டின்படி, கிளைக்குழுத் தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்கத்தகுதியுள்ள உறுப்பினர்களது பட்டியல்கள் சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களில் 25.04. 2003இல் இருந்து,04.05.2003 வரை உறுப்பினர்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பட்டியலில், ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பின் எழுத்து மூலம் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க செயலாளருக்கு 04.05.2003ற்கு முன்பாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் தற்போது செயற்படாதுள்ள கிளைகளின் பட்டியல்கள் கீழ்வரும் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

| இல செயற்படாதுள்ள கிளைகள் | | காட்சிப்படுத்தப்பட்டுள்ள கிளைகள் |
|---|---|---|
| 01. கறுக்காய்த்தீவு கிளை | – | ஞானிமடம் கிளை |
| 02. வினாசியோடை கிளை | – | கௌதாரிமுனைக் கிளை |
| 03. வில்லடிக் கிளை | – | மட்டுவில் நாடு கிளை |

ஏனையவை அந்தந்தப் பகுதிக் கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பொன். தில்லைநாதன்,
தலைவர்,
பூநகரி ,ப.நோ.கூ. சங்கம்.

(சி-7859)



# இப்பொழுது சிறுபோக நெற்பயிர் செய்கைக்கு துரித செயற்பாடுடைய மண்வளமாக்கி கிடைக்கின்றது

அக்றிகோலாஸ் ஜிப்சைட்60+ AGRICOLS GYPSATE-60 PLUS முதற்கட்டமாக MINARAL GYPSUM 98.6% தூய ஜிப்சம் 28.04.2003 இல் இறக்குமதியாகின்றது. 1988ஆம் ஆண்டு கிளிநொச்சி, மன்னார் மண்ஆய்வுகள் எமது விவசாய மண்ணில் உவர்த்தன்மை (SALAINITY) அநேகமான மண்ணில் மக்னீசியம் பற்றாக்குறை காணப்பட்டன. 2002 ஆம் ஆண்டு மேற்கொண்ட மண் ஆய்வுகளில் (கிளிநொச்சி, மன்னார்) மண்ணில் மக்னீசியம் பற்றாக்குறை இரும்புச்சத்து செறிவு (IRON TOXSIDE) அநேகமான மண்ணில் தென்பட்டன. அநேகமான விளைநிலங்களில் 1970 ஆம், 1980 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 30% வரை விளைச்சல் குறைவடைந்துள்ளமை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது மண்ஆய்வு நிபுணர் அவசரமாகவும், அவசியமாகவும் மண்வளமாக்கி ஜிப்சைட் 60+ ஐ சிபாரிசு செய்துள்ளார்.

01.05.2003 முதல்
COLOMBO COMMERCIAL FERTILIZERS LTD உனுப்பிட்டிய வத்தளையில் தயாரிக்கப்படவுள்ளது.

AGRICOL'S GYPSATE 60 PLUS (Ca-19% - Mg-7%, S-27% + 9T.E)

ஜிப்சைட் 60+ இல் கல்சியம், மக்னீசியம், கந்தகம் உடன் 9 சுவட்டு மூலகங்களும் அடங்குகின்றன. ஜிப்சைட் 60+ பாவனை சிபாரிசு:- நெல் வயலில் :- 2வது உழவில் அல்லது கடைசி உழவில் 1 ஏக்கருக்கு 2 அந்தர் வீதம் பாவிக்கவும். ஜிப்சைட் 60+ பாவிக்கும் நிலங்களில் (1) அடி உரம் (2) 1வது மேல் உரம் (3) 2வது மேல் உரம் 15% வரை குறைவாகவே தேவைப்படும், குறைவாகவே பாவிக்கவும்.

கிளிநொச்சி, முல்லை கையிருப்பாளர்:-

## பசுமை வேளாண் சேவை

| கிளைகள்: | கிளிநொச்சி:- | முல்லைத்தீவு:- |
|---|---|---|
| | கிளிநகர் | புதுக்குடியிருப்பு |
| | கந்தபுரம் | விசுவமடு |
| | முழங்காவில் | முள்ளியவளை |
| | வட்டக்கச்சி | கற்சிலைமடு |
| | முரசுமோட்டை | முத்தயன்கட்டு |
| | | துணுக்காய் |

சந்தைப்படுத்துவோர்:-
அக்றி கோலாஸ்,
46, பழைய சோனகத்தெரு,
கொழும்பு-12.

தொடர்புகட்கு:
K.G. சம்பந்தர் 458821
S.சிறிபதி 0777-319264

(சி-8094)




கொண்டிருந்தன. அத்தோடு, யாழ்குடாநாட்டில் நிலை கொண்டிருந்த 52ஆவது படைப்பிரிவும் அதன் பின்புலத்தில் பக்கபலமாக இருந்தது.

இதேசமயம் ஆனையிறவு மீதான புலிகளின் தாக்குதல் சிறிலங்கா அரசினாலும் அதன் படைப்பிரிவினாலும் அதன் இராணுவ ஆலோசகர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோரினாலும் எதிர்பார்க்கப்பட்டே இருந்தது. அத்தோடு இப் படைத்தளமானது விடுதலைப்புலிகளால் வெல்லமுடியாத தளம் எனவும் நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தது. அதாவது ஆனையிறவுப் படைத்தளத்தில்நிலைகொண்டிருந்த துருப்புக்களின் எண்ணிக்கை, நிலைநிறுத்தப்பட்டிருந்த ஆயுத தளபாடங்கள், ஆனையிறவுப்படைத்தளத்தின் புவியியல் அமைப்பு என்பன இராணுவத்தரப்பிற்குச் சாதகமாக இருந்ததன் காரணமாக இத்தளம் வெற்றிகொள்ளப்படுதல் என்பது சாத்தியமாகப் போவதில்லை என்றே கருதப்பட்டது. இராணுவ

"ஆனையிறவுத் தளம், இயக்கச்சி முகாம் என்பவற்றில் சிறிலங்காப் படையினர் தங்களுடைய பிரதான போரிடும் அணிகளான 53 ஆவது படையணியையும் 54 ஆவது படையணியையும் குவித்து சேமித்து வைத்திருந்தார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் இந்தப் படைத்தளத்தின் வீழ்ச்சி என்பது குடாநாட்டினுடைய எதிர்காலத்தையே தீர்மானித்து விடும் என்பதனாலாகும். அவை அந்தத்தளத்தை விட்டு ஓடி விட்ட சம்பவம் இனி சிறிலங்காப் படைகளுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டன."

**இராணுவ ஆய்வாளர் தராகி.**

# ஈழப்போராட்டத்தில் புதிய பரிணாமத்திற்கு வழிவகுத்த இருவெற்றிச் சமர்கள்

ஆனையிறவை சிறிலங்கா இராணுவத்தினிடமிருந்து மீட்பதற்கென விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாம், நான்காம் கட்டங்களும் புலிகளிடம் பறிகொடுத்த ஆனையிறவை மீளக் கைப்பற்ற



சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய "தீச்சுவாலை" நடவடிக்கை முறியடிப்பும் மூன்றாவது ஈழப்போரை முடிவிற்குக் கொண்டுவந்த இரு பெரும் சமர்கள் எனின் மிகையாகாது.இவ்விரண்டு பெரும் சமர்களிலும் சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளிடம் படுதோல்வியைச் சந்தித்தது நிராகரிக்க முடியாத வரலாறு.

இவ்விரு சமர்களும் அடிப்படையில் ஆனையிறவிற்காக நடந்தவையேயாகும். ஈழப்போரின் மிகப் பெரும் சமர்களாக இச்சமர்கள் இரண்டும் அமைவதற்கு ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவமே முக்கியமான காரணியாகும். "ஆனையிறவு யார் கைகளில் உள்ளதோ யாழ்ப்பாணம் அவர்கள் கைகளில்" இருக்கும் என்ற அளவிற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவிற்காக இவ்விரு பெரும் சமர்களும் நடைபெற்றமையானது ஆச்சரியத்துக் குரியதொன்றல்ல.

"உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி அலை மோதுகின்ற இனிய தருணம் இது. எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ எது நடக்க வேண்டுமென்று நாம் உளமார நினைத்தோமோ எது நடக்கும் என்று நான் சொல்லி வந்தேனோ அது இன்றைக்கு நடந்தேறியிருக்கிறது.

தமிழர்களுடைய வரலாற்றிலே இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மகத்தான சாதனை வெற்றியாகும்."

**ம.தி.மு.க. பொதுச்செயலாளர், வை.கோ.**


ஆனால் இவ்விரு பெரும்சமர்களிலும் சிறிலங்கா இராணுவம் தோல்வி கண்டமையானது விடுதலைப் போராட்ட வரலாற்றின் இராணுவச் சூழ்நிலை, அரசியல் சூழ்நிலை, சர்வதேச நிலைப்பாடு என்பனவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. தமிழீழ விடுதலைப் போராட்டம் எவருமே நிராகரிக்க முடியாததொரு புதிய பரிமாணத்தைப் பெற்றது



ஆனையிறவிற்கான பெருஞ்சமர் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 150 சதுரக் கிலோமீற்றர் பரப்பில் பரந்திருந்த அப்பெரும் தளத்தில் ஆனையிறவிற்கான சமர் ஆரம்பிக்கப்பட்ட வேளை சிறிலங்கா இராணுவத்தின் 54ஆவது டிவிசன் படைப் பிரிவையும், 53ஆவது டிவிசனின் ஒருபகுதியையும்

ஆய்வாளரான சிவராம் இப்படைத்தளத்தின் தென்முனைப் பகுதியாக இருந்த பரந்தன் முகாமில் முன்னரங்க நிலைபற்றிக் குறிப்பிடுகையில் இவை இலங்கைத்தீவில் மிகவும் பலம் பொருந்திய முன்னரங்கப் பகுதியெனக் குறிப்பிட்டார். இதேவேளை சிறிலங்கா இராணுவத்திற்கு ஆலோசனை வழங்கும் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தாளையடி முன்னரங்க நிலைகள் குறித்து குறிப்பிடுகையில் நன்கு பயிற்சி பெற்ற படைப்பிரிவுகள் நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் ஓர் அங்குலம் தானும் பின்னோக்கி நகரமாட்டார்கள் என உறுதிபடக் கூறினார். ஆனால் யுத்தம் ஆரம்பமாகிய பின்னர் இவ்விராணுவ ஆய்வாளர்களின் அபிப்பிராயங்கள் எல்லாம் தவறான மதிப்பீடுகளாகவும் எதிர்வு கூறல்களுமாகின.

ஆனையிறவு மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலானது 1999ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அமைக்கப்பட்டு 2000ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முடிவிற்கு வந்தது. இரண்டு கட்டங்களில் மூன்று பெரும் நகர்வுகள் மூலம் இப்பெரும்படைத்தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். இவ் ஆனையிறவிற்கான மோதலின் போது சிறிலங்காவின் முப்படைகளுக்கு எதிராக தரையிலும், கடலிலுமாகச் சமரை நடத்தவேண்டியதாக இருந்தது. இச்சமரில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முத்திரை பதித்துள்ள




தாக்குதல்கள், தந்திரோபாயங்கள் எனப் பலவற்றைக் காண முடியும். எடுத்துக்காட்டாக சிறிலங்கா இராணுவத்திற்கு அதிர்ச்சியூட்டிய குடாரப்பு தரையிறக்கம், ஏ-9 பாதையின் ஊடறுப்புப் போன்றவை ஆனையிறவின் தலைவிதியையே மாற்றுவதாயின. இச்சமரில் சிறிலங்காவின் முப்படைகளும் இழப்புக்களைச் சந்தித்தன.


ஆனையிறவு சமரில் சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தை எந்தளவிற்கு நிலைகுலைய வைத்தது என்பதற்குத் தனது படையணி சந்தித்த சேதத்தால் விரக்தியுற்ற உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தனது பொறுப்பிலிருந்து மாறிச் சென்றதையும் சிறிலங்கா சனாதிபதி இராணுவக் கட்டளைப்பீடத்தில் திடீர்மாற்றங்களை அறிவித்திருந்ததையும் சுட்டிக்காட்ட முடியும்.

இதேவேளை,இரண்டாவது பெரும்சமராக மாறிய

"ஆனையிறவையும் சிறிலங்காப் படையினர் விடுதலைப்புலிகளிடம் இழக்கும் நிலைமை ஏற்படுமாயின் அது சிறிலங்காவுக்கு கிடைத்த "தியன்பியன் பூ" தோல்வியாகவே யிருக்கும் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் வியட்நாமின் தியன்பியன் பூவில் நிலை கொண்டிருந்த பிரெஞ்சுப் படையினரை வியட்நாமியப் படைகள் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுத் தாக்கியழித்த சம்பவத்திற்கு நிகராகவே ஆனையிறவு புலிகள் வசம் வீழுமாயின் கணிக்கப்படலாம்."

**இந்திய அமைதிப்படையில் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா (தளம் வீழ்ச்சியடைய இருதினங்களுக்கு முன்)**

"தீச்சுவாலை நடவடிக்கை"யானது விடுதலைப்புலிகளிடம் ஓராண்டுக்கு முன்னர் பறிகொடுத்து விட்ட ஆனையிறவை



மீளப்பெறுவதற்கென பெரும் தயாரிப்புடன் மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கையாகும்.

ஒருவகையில் ஆனையிறவில் சந்தித்த அவமானகரமான தோல்வியைப் போக்கிக்கொள்ள அன்றி மறைத்துவிட இராணுவம் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கை இதுவாகும். நன்கு பயிற்சி பெற்ற சுமார் 15000 துருப்புக்கள் இப்படை நடவடிக்கைகளில் பங்குபற்றியிருந்தன.

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்தும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.முன்னணியைப் பொறுத்தும் ஆனையிறவை மீட்பதென்பது

"கமாண்டோ பிரிவு, விசேட படையணி, எயர் மொபைல் பிரிகேட் ஆகியவற்றைக் கொண்டு விசேடமாக உருவாக்கப்பட்ட 53 ஆவது படையணியினர் கூட விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறுகின்றனர்."

**இராணுவ ஆய்வாளர், இக்பால் அத்தாஸ்.**

தன்மான ரீதியிலான பிரச்சினையாகவே கொள்ளப்பட்டிருந்தது. அப்போதைய சிறிலங்காப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆனையிறவு மீட்கப்படும் எனப் பாராளுமன்றத்தில் வாக்குறுதி கூட அளித்திருந்தார்.

இதேவேளை, தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது சிறிலங்கா இராணுவம் இச்சமரில் வெற்றிபெறுவோம் என்ற உறுதிகளையும் கொண்டிருந்தது. இதற்கு விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை மேற்கொண்ட காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் தென்கிழக்கிலும், தென்மராட்சி மேற்கிலும் அது மேற்கொண்ட சில இராணுவ நடவடிக்கைகள் வெற்றியளித்தமையும் சிறிலங்கா இராணுவத்திடம் புதிதாக வந்து சேர்ந்திருந்த பலகுழல் எறிகணை செலுத்திகளும் இந்நம்பிக்கையைச் சிறிலங்கா இராணுவத்திற்குக் கொடுக்கக் காரணமாக இருந்ததெனலாம்.

ஆனையிறவில் இராணுவம் விடுதலைப்புலிகளிடம் பெரும் தோல்வி ஒன்றைச் சந்தித்தவேளை அதனை நவீனப்படுத்து



வதற்கும் வலுப்படுத்துவதற்குமெனச் சிறிலங்கா அரசினால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயுதப் படைத்தரப்பு கோரிய ஆயுதத் தளபாடங்கள் அரசால் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்தது.

இதனைத்தவிர விசேட பயிற்சிகள், வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. தீச்சுவாலை படைநடவடிக்

கைக்கென பல மாதங்களாக ஒத்திகைகளும் மேற்கொள் ளப்பட்டன. புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத தளபாடங்களில் விசேட பயிற்சியும் கொடுக்கப்பட்டது.

இந்தவகையில் பெரும் தயார் நிலையில் இருந்த சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளின் ஒருதலைப்

> "என்ன நடந்தது என்று எவரும் எனக்கு விளக்கம் தர வேண்டியதில்லை... என்ன நடந்தது என்பது எல்லாம் எனக்குத் தெரியும்... இப்போது நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பது மட்டும் தான் எனக்குத் தெரிந்தாக வேண்டும்... என்ன செய்யப்போகிறீர்கள்?"
>
> **ஆனையிறவுத் தோல்வியின்பின் முப்படைத்தளபதிகளிடம் சந்திரிகா.**

பட்சமான போர்நிறுத்தம் நிறைவுற்று (2001 ஏப்ரல் 25 நள்ளிரவு) ஒருசில மணித்தியாலங்களுக்குள் தீச்சுவாலை



நடவடிக்கையை ஆரம்பித்தது. மிக மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையை எதிர்கொண்ட புலிகள் உக்கிரமான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு தீச்சுவாலை நடவடிக்கையை முறியடித்தனர். 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 திகதி தொடக்கம் 28ஆம் திக்தி வரை நடைபெற்ற இவ் உக்கிரமான சமரில் சிறிலங்கா இராணுவம் மிகப்பெரும் உயிரிழப்பையும் சந்திக்கவேண்டி வந்தது.

இவ்விரு சமர்களிலும் விடுதலைப்புலிகள் உறுதியான வெற்றிகளைப் பெற்றுக்கொண்டனர் என்பதில் கேள்விக்கு இடமில்லை. இத்தகைய வெற்றிகள் மேற்குலகத் தவர்களி னால் ஈட்டப்பட்ட ஒன்றாக இருந்திருக்குமானால் புதிய மில்லேனியத்தில் பெறப்பட்ட மிகப்பெரும் இராணுவ வெற்றி

> "இராணுவத்தின் பலத்தை அதிகரிப் பதற்கே ஆனையிறவிலிருந்து பின்வாங்கி னோம் எனச் சிலர் கூறுகின்றனர். அது முழுப் பொய். அந்தத்தருணத்தில் இராணுவம் தோல்வியைத் தழுவியுள்ளது. கேற்றைத் திறந்து வீட்டு வீட்டைப்பாதுகாக்க வீட்டின் வாசலடியில் நிற்பது போன்றதே தற்போதைய நிலைமையாகும்."
>
> **முன்னாள் இராணுத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க**

களாக இவை சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக் கும். மூன்றாம் உலக நாடொன்றில் அதுவும் மேற்குலக நாடுக ளுக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இவ்வெற்றிகள் அமையப் பெற்றிருக்காமையால் இவ்வெற்றிகள் வெளியுலகில் பெறவேண்டிய முக்கியத்துவத்தைப் பெற்றனவா என்பது சந் தேகமே.

இவ்விரண்டு சமர்களிலும் விடுதலைப்புலிகள் பெற்ற வெற்றியானது இலங்கையில் இராணுவ-அரசியல் ரீதியில் பல மாற்றங்களுக்கு வித்திட்டது. இதில் விடுதலைப்புலிக ளினால் சில விடயங்கள் உறுதியாக நிரூபிக்கப்பட்டவை யாக இருந்தன.

01.சிறிலங்கா இராணுவத்தின் எத்தகைய பலம்



பொருந்திய படைநிலையையும் தாக்கியழிக்கும் வல்லமையை புலிகள் பெற்றுக்கொண்டிருந்தனர்.

02. எத்தகைய பாரிய படைநடவடிக்கைகளையும் விடுதலைப்புலிகள் எதிர்கொண்டு முறியடிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்விரண்டு சம்பவங்களும் சிறிலங்கா இராணுவத்தின் மேலாண்மையை முடிவிற்குக் கொண்டுவந்தவை என லாம்.அத்தோடு சிறிலங்கா இராணுவ இயந்திரத்தின் செயற் பாட்டை பெரும்பாதிப்பிற்குள்ளாக்கியிருந்தன. அத்தோடு சிறிலங்கா இராணுவத்தால் யுத்தம் வெல்லப்பட முடியாத தொன்று என்பதும் உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை இவ்விரு பெரும்சமர்களிலும், சிறிலங்கா இராணுவ ரீதியில் கண்ட தோல்வியானது சிறிலங்கா அரசி யலில் பாரிய தாக்கங்களையும், பல யதார்த்தத்தினையும் வெளிப்படுத்தியது. இதில் முதலாவதாக சனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவின் 'யுத்தத்தின் மூலம் சமாதானம்' என்ற சித்தாந்தம் முடிவிற்கு வரவேண்டியதாயிற்று.

அதாவது யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்றோ, சமாதானம் என்றோ பேசுவது தவறான மார்க்கம் என்பது நிரூபிக்கப்பட்டது. அத்தோடு சமாதானப் பேச்சுவார்த்



தைக்கென முன்நிபந்தனைகள் எதையும் விதிக்கமுடியாத அளவில் சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் பலவீனப்படுத் தப்பட்டதாகி இருந்தது.

அது மாத்திரமல்ல,இத்தோல்வியின் விளைவானது சிறிலங்கா அரசியலில் மாற்றத்திற்கும் காரணமாகியது. அதாவது 1993 நவம்பரில் பூநகரிப் படைத்தளம் தாக்கியழிக்கப் பட்டமையும், அதற்கு முன்னர் யாழ்தேவி நடவடிக்கை தோல்வியடைந்தமையும் ஐ.தே.கட்சி அரசாங்கத்தை ஆட்சியி லிருந்து வெளியேற்றக் காரணமாக இருந்தது போன்று பொ.ஐ.முன்னணி ஆட்சியில் இருந்து வெளியேற



> "கடந்த 21ஆம் திகதியன்று இந்த நாட்டின் இராணுவ வரலாறு திருப்பி எழுதப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுக்கு எந்த இலக்கும் பெரிதும் அல்ல...தங்களால் தாக்க முடியாததுமல்ல என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக்காட்டினார்கள்.
>
> அடிக்கடி சிறிலங்காவின் வரலாற்றினை மாற்றி மாற்றி எழுதிவரும் வரலாற்றாசிரியரான வேலுப்பிள்ளை பிரபாகரன், தனது போராளி களை யாழ். குடாநாட்டின் நுழைவாயிலில் இருந்த பாரிய இராணுவத்தளத்தினையும் அதன் சுற்றுப் பிரதேசத்தையும் கைப்பற்றிக் கொள்ளவைத்ததன் மூலம் அந்த வரலாற்றில் மற்றொரு கறுப்பு அத்தியாயத்தை இணைத்துள்ளார் என்றே கூறவேண்டும் அது மட்டு மல்லாமல் தாம் கைப்பற்றிக்கொண்ட அதேமண்ணில் தனது பீரங்கிப் படைத் தளபதியான பானுவின் மூலம் தமிழீழ தேசத் தின் கொடியையும் ஏற்றிவைத்தார். இதே மண்ணில் தான் சிறிலங்கா இராணுவத்தினர் அணிவகுத்து, அசையாது மரியாதை செலுத்தி நிற்க சிங்கக்கொடி ஏற்றப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன."
>
> **றோய் டெனிஸ் சன்டேலீடர் 30.04.2000**

ஆனையிறவிற்கான இவ்விரு சமர்களும் காரணமாக இருந்தன. அதுமாத்திரமல்ல தனிப்பட்ட ரீதியில் அன்றைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை போன்றவர்களுக்குப் பெரும் அரசியலில் பின்னடைவைத் தேடிக்கொடுப்பதாகவும் இத்தோல்விகள் அமைந்தன. பெரும் சாதனையாளர்களாகப்



பட்டம் பதவிகளைச் சூடிக்கொண்ட இவர்கள், தமது பதவிக் கான பணிகளையே சிந்திக்க முடியாதவர்களாய் முடங்கிப் போக வேண்டியவர்களாகினர். அத்தோடு விடுதலைப் புலிகள்




ஆயுதங்களைக் கைவிட்டாலே பேச்சுவார்த்தை எனக் கூறி வந்த அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் காதிர்காமரின் பேச்சுக்கள் அர்த்தமற்றவையாகின.

ஏனெனில் புலிகளின் இவ்வெற்றிகளின் பின்னர் புலிகளின் இராணுவ இருப்பு உறுதி செய்யப்பட்ட நிலை யிலேயே இனிச்சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற முடியும்



என்பது உறுதிசெய்யப்பட்டது. அதாவதுஇவைகளில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்பதன் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் இனி நடைபெற முடியும் என்பது நிராகரிக்கப்பட முடியாததாகியது.

அடுத்த முக்கியத்துவம் மிக்க விடயமாக அமைந்தது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாக மாட்டாது என்பதை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்ட மையாகும். இதன் மூலம் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக் கப்படுவதால் அது விடுதலைப்புலிகளிடையே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டிற்கு அவற்றைக் கொண்டு வந்து சேர்த்ததாகும்.

### சமாதானமே தெரியுமா உனக்கு...?


**வெள்ளைக் கொடியுடனும்**
**வெறும் கையுடனும் ~ வரும்**
**சமாதானப் புறவே.....**
**உனக்குத் தெரியுமா....**
**நீ வந்த பாதை?**
**ஆனையிறவும், தீச்சுவாலையும்**
**இல்லையெனில்**
**நீயுமில்லை.... நாமுமில்லை.....**

**ஏ~9 பாதை திறக்கவும்**
**வன்னி புதுவடிவம் கொள்ளவும்**
**ஆனையிறவே.... தீச்சுவாலையே..... நீ**
**இல்லையெனில்**
**எமக்கு எதுவுமே இல்லை.....!**

**சமாதானம் வர படை வேண்டும்**
**சொன்னதம்மா ஆனையிறவு ~ அந்த**
**பயணம் தொடர பலம் வேண்டும்**
**சொல்லுதம்மா தீச்சுவாலை.**

- பூ. சுபாநந்த்

இந்தவகையில் ஆனையிறவுப் படைத்தளம் தாக்கியழிக் கப்பட்டமையும் ஆனையிறவை மீளக் கைப்பற்ற இராணுவம் மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கை முறியடிக்கப்பட் டமையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை புதிய இராணுவ-



அரசியல் பரிமாணத்திற்குள் கொண்டு சென்றது எனலாம்.

இதன் விளைவாகவே சர்வதேச மத்தியஸ்துவத்துடன் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்த உடன் பாடு ஒன்றைச் செய்துகொள்ளவும் மூன்றாம் நாடொன்றில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் வழிசமைத் ததெனலாம்.

**ஜெயராஜ்**

வேறுவிதமாகக் கூறுவதானால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தையும் விடுதலைப் புலிகளுக்குச் சிறிலங்கா அரசுடன் சம அந்தஸ்தினையும் தேடிக்கொடுத்த வெற்றிகள் இவையாகும்.

ஆகையினால் இச்சமர்களின் வெற்றியானது தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நிறைந்திருக்கத் தக்கவையாகும்.




# தீயை தீயால் எரித்தவர்கள்

**க.மிரேஸ்**

**24.12.2000** தொடக்கம் 24.04.2001 வரை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை கொச்சைப்படுத்திய சிங்கள ஏகாதிபத்திய அரசு பலவீனத்தினால் புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்று விசமப் பிரச்சாரம் செய்தது. போர்நிறுத்தத்தை, யுத்தத்தவிர்ப்பைச் செய்ய மறுத்தது. எனவே புலிகளும் 24.04.2001 நள்ளிரவுடன் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தனர்.

இங்கு எதிரி முந்திக்கொண்டு தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பிக்க நினைக்கிறான். பலவீனமுற்றிருக்கும் புலிகளை அழித்துவிட இதுவே தருணம் என நினைத்து தனது முழு இராணுவ இயந்திரத்தையும் இயக்கி பாரிய இராணுவ நடவடிக்கைக்கு தயார் செய்கிறான். எதிரியின் முட்டாள்தனமான அந்த தயார்ப்படுத்தலின் விளைவு பல நூறு உயிர்களை காவு கொண்டது என்று சொல்வது பொருத்தமாகும். அதைவிட எதிரி எம்மை பலவீனமென நினைத்து எம்முடன் மோதலில் ஈடுபட்டு தான் பலவீனமடைந்து இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை வரை பயணித்து எமது வாசலிலேயே சமாதானத்தைத் தந்துவிட்டுச் சென்ற நிகழ்வும் எதிரியின் முட்டாள் தனத்தின் ஓர் அங்கமாகும். இப்படித்தான் அன்றைய நாளை எம்மால் நினைவு கொள்ளமுடியும்.

24ம்திகதி காரிருள் சூழ்ந்த அந்தப் பொழுது இரவு 12.00 மணியை அண்மித்துக்கொண்டிருந்தது. இன்று இரவுடன் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் முடிவுறுவதினால் நிச்சயம் எதிரி நாளை ஏதேனும் ஒரு தாக்குதலை எம் பிரதேசம் மீது தொடுப்பான் என எண்ணி இரவோடு இரவாக அணிகளை தயார்ப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டபோது, போர்நிறுத்தம் முடிவதற்கு இன்னும் ஒருமணி நேரமே இருந்தது.

காரிருளோடு ஒன்றித்திருந்த நிசப்தத்தைக்கிழித்து வீரம் மிகுந்த குரலொன்று ஒலிப்பதை செவியுற்றேன்.அங்கே தளபதி வீரமணி, தொலைத் தொடர்பினூடாக தளபதி கோபித்துடன் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டிருந்தார். "கோபித் நிச்சயம் நாளை எதிரி தாக்குதலைத் தொடுப்பான் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுங்கள். இந்தமுறை விடக்கூடாது. உள்ளவாறவன் எல்லோரும் செஞ்சிலுவைச் சங்கத்துடன் வெளியே போகவேண்டும்" என்றார்.

அதனை அடுத்து தொடர்ந்த இன்னுமொரு பெண் போராளியின் குரல் வினா



ஒன்றைத் தொடுத்தது. அண்ணா இவ்வளவு நாள் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளாத சிங்கள அரசு நாளை சண்டையைச் செய்யுமா? எனக் கேட்டார். நிச்சயமாகச் செய்வார்கள். ஏனெனில் சிங்களவரோடேயே ஒட்டிப்பிறந்த ஆக்கிரமிப்பு மனநிலையும், தமிழனைக் கொன்றொழிக்கும் துவேசமும் உள்ளவரை சிங்களவன் எம் மண்ணை ஆக்கிரமிப்பதிலிருந்து சிறிதும் மாறமாட்டான். எனவே நாளைய சண்டை நிச்சயம் நடக்கும். அது தவிர்க்கமுடியாத தொன்றாகும் என பதில் சொல்லியபோது போர்நிறுத்தமும் முடிவுற்ற நேரமானது.

எங்குமே மயான அமைதியாய் இருந்த காரிருள் பொழுது, சில கோட்டான்களின் சத்தத்தால் கட்டாக்காலி நாய்களின் அலறல்களால் நிசப்தத்தை இழந்தது. காரிருளைக் கிழித்தபடி இடையே, சில ஒளி அலைகள் வானத்தை மெலிதாய் வெளிச்சமிட்டுக் காட்டிய, சில நொடிகளில் எங்கோ தூரத்தில் டொம்...டும்...டொம்... என்ற சத்தங்கள் காதில் கேட்டு மறைவதற்குள் டொம்,டொம்,டொம் எனக் காதைக்கிழித்திடும் பேரிரைச்சல் வானைப் பிளந்தது.

கணப்பொழுதுக்குள் பெரும் நிசப்தத்தைக் கிழித்து எதிரியின் பல எறிகணைகள் வந்து வெடித்துச் சிதறியது. எறிகணைகள் வெடித்ததிலிருந்து பறந்த கந்தகத் துண்டுகள், நாலா பக்கங்களிலும் கீச்சிடும் இசையுடன் சீறிப்பாய்ந்தன. அப்படி சீறிப்பாய்ந்த எறிகணைத் துண்டுகள் சில மரங்களிலும், காவலரண் கூரைகளிலும், சுவர்களிலும், மறைப்பு வேலிகளிலும்,டப்,டப்,டப் என்ற சத்தத்துடன் பட்டு தமது இறுதிப்பயணத்தை முடித்துக்கொண்டன. அதிலிருந்து எழும்பிய நச்சுப் புகை மண்டலம் எல்லா இடமும் பரவி எம்மையும் ஆட்கொண்டு நச்சுக் காற்றை அள்ளி வழங்கியது இப்படியாக , இடை இடையே எதிரியின் ஏவுதளங்கள் தனது உயிர்ப்பை உறுதிப்படுத்தி உலாவவிட்ட எறிகணைகள் பரவலாக விழுந்து வெடித்து அன்றைய நிசப்தத்தைக் கலைத்தே நின்றது.

நேரம் நள்ளிரவைத்தாண்டி நின்றது. எதிரியின் பக்கம் எப்படியிருக்கிறது என்பது தெரியாமல் இருந்தாலும் ஓரளவு ஊகிக்கக்கூடிய அளவு எதிரியின் பலம் பலவினம் எமக்குத்தெரிந்திருந்தது. எனவே எதிரி எந்த நேரத்திலும் தாக்குதலைத் தொடங்குவான் என்று எதிர்பார்த்து எங்கள் காவலரண் கள்கண் விழித்துக் கொண்டே இருந்தன. ஒவ்வொரு போராளியும் தன்னை மறு நாளைய போரிற்காய் தயார்ப்படுத்தித் தனது சுடுகருவியுடன் எதிரியைச்சுட்டெரிக்கக் காத்து நின்றான்.

சில இடங்களில் எதிரியின் நடமாட்டங்கள் தூரத்தே இருப்பதை எவருக்கும் தெரியாத, போராளிகளுக்கு மட்டுமே உரிய "கள" அனுபவத்தினால், சுதந்திர போராளிகளின் ஞானத்தால் காணமுடிந்தது.

எல்லாவற்றையும் எதிரி எமக்குத் தெரியாமல் செய்திருந்தாலும் தேசவிடிவிற்காய் உயிர்துறந்து போராட வந்த எமக்கு இயற்கை மறைக்கவில்லை என்பதை ஏவலாளர்கள் சிறிதும் அறியவில்லை. இதன்போது எமது பக்கமும் படைத்துறைசார் தயார்ப்படுத்தல்கள், விரைவாகவும், கட்டாயமாகவும் செய்யப்பட வேண்டிய தேவை வந்தது. காரணம் எதிரி உண்மையாக ஏதோ ஒரு தாக்குதலுக்கு தயாராகி விட்டான் என்பதை அவனது நடவடிக்கை உணர்த்தியதால்,திடீர் திடீரென நாம் உசாரானோம். அந்த குறுகியகால இடைவெளியில் ஒவ்வொரு போராளியும் மிக,மிக உச்சக்கட்டமான உழைப்பில் ஈடுபட வேண்டியிருந்தது. இயந்திர சக்கரத்தை விட வேகமாக நாம் சுழன்றோம்.

இப்போது நேரம் விடிகாலையை அண்மித்துவிட்டது. எதிரியின் ஏவுதளங்கள் இடையிடையே கக்கிக்கொண்டிருந்த எறிகணைகள் ஓய்வாக இருந்தன. என்ன அதிசயமோ பறவைகள்,மிருகங்கள் கூட சத்தமிடவில்லை. காற்றும் ஓய்ந்து உலகமே செத்துவிட்டது போல் ஒரு தோற்றம் தென்பட்டது. இந்த அமைதி பூகம்பத்திற்கு முந்தியதாக இருக்கவேண்டும் என நினைத்து இருந்தபோது நேரம் 5.00 மணியாக இருந்தது.

இப்போது தொலைத், தொடர்பில் தளபதி தீபனின் குரல்நிதானமான , தெளிவான , சாந்தமான. அதேவேளை வீரமான கட்டளைகளை வழங்கியது. எதிரி ஏதோ ஒரு நடவடிக்கையை செய்யப்போகிறான் எதற்குமே எல்லோரும் தயாராய் இருங்கள். எதிரி எந்தவித நடவடிக்கையைச் செய்தாலும் அதைத் திடமுடன் எதிர்கொள்ளத்துணிந்து நில்லுங்கள். இதோடு எதிரிக்கு நல்லதொரு மறக்கமுடியாத பாடத்தைக் கற்பிக்கவேண்டும் என்று சொல்லி வெற்றியின்பின் சந்திப்போம் என்று சொல்லி முடிந்த அந்தக் கணத்தில்

மறுமுனையில் போராளி மாதவன் தனது காவலரணுக்குக் கிட்டவாக எதிரி அண்மித்து விட்டான், என அறிவித்தார். எதிர்முனையில் தளபதி கோபித் எல்லாம் வெல்லலாம், துவங்கியதும் துவம்சம் செய்ய ஏற்பாடுகள் உள்ளன என அறிவித்தார். நேரம் சரியாக இப்போது 5.00 மணி 35 நிமிடமாக இருந்தது. வானைப் பிளந்து கொண்டு எதிரியின் ஒரு தேடொளி( **Para Light**) மேலெழுந்தது. அதே கணத்தில் எதிரியின் கட்டுப்பாட்டுப்பக்கமாக பல நூறு வெளிச்சங்கள் பளிச் பளிச்சென மின்னின. அதிகாலைப் பொழுது என்பதனால் அந்த வெளிச்சங்கள் நெருப்பைக் கக்குவதைக் காணமுடிந்தது. இப்போது யாழ்ப்பாணம் தீப்பிழம்பின் வடிவமாகக் காட்சி தந்தது.

இந்த தீப்பிழம்புகள் எதிரியின் எறிகணை ஏவுதளங்கள் கக்கிடும் எறிகணை மழைகளாகத்தானிருக்கும் என ஊகித்தவராய், கணப்பொழுதில் எல்லோரும் தயாராகியபோது எறிகணைகள் எம்மருகில் மழையெனப் பொழிவதற்கும் எதிரியின் சுடுகருவிகள் சன்னங்களை மழைத்தூறல் போல் கக்குவதற்கும் நேரம் சரியாக இருந்தது. எதிரியின் தீச்சுவாலை நடவடிக்கை (அக்கினி ஹீல்) தொடங்கிவிட்டது. மாதவன் குறிப்பிட்ட அதே இடத்திலும் ஏனைய இடங்களிலும் சண்டை தொடங்கியது. எங்குமே வேட்டோசைகளும்,எறிகணை வெடிப்புக்களும் வானைப் பிளந்தது. எதிரியின் பல்குழல் ஏவுகருவிகள் எறிகணைகளை எண்ணற்று பொழிந்து கொண்டே இருந்தன. இப்போது எங்குமே பெரும் வெடியோசையும் புகை மண்டலமுமாகக் காட்சியளித்தது.

இந்தக் கணத்தில் ஆண் ,பெண் போராளிகளின் துப்பாக்கிகள் ஆவேசத்துடன் உயிர்பெற்றன. கைக்குண்டுகள் இலக்குத் தவறாமல் போய் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. புலிகளின் எறிகணை ஏவுதளங்கள் துல்லியமான சூட்டாதரவை வழங்கிக்கொண்டிருந்தன.

இப்போது முகமாலையெங்குமே, உச்சக்கட்ட போரின் உருவாகக் காட்சியளித்தது. கிளாலி, இந்திராபுரம், கண்டிவீதி, கண்டல் வரையுள்ள நிலம் சன்னங்களாலும், எறிகணைகளாலும், குண்டுகளாலும், விமானக்குண்டுகளினாலும் நிரப்பப்பட்டு எரிமலையே உருவாகிவிட்டதை உணர்த்தியது. அந்த நிலங்களின் மண் மெல்ல மெல்ல இரத்தம் தோய்வதாக இருந்தது.

எமது காவலரண்களை உடைத்து உட்புக நினைத்தவர்கள், புற்றீசல்போல் உள்நுழைந்தார்கள் ஒரு குறுகிய பிரதேசத்தினுள். இந்தளவு தொகை இராணுவத்தினர் புகுந்தது இதுவே முதற்தடவையாக இருந்தது. கிட்டத்தட்ட எமது காவலரண் பிரதேசத்திற்கு ஒரு மீற்றருக்கு 2 எதிரி வீதம் உள்நுழைந்தனர். இதை எமது காவலரண்களோடு ஒப்பிட்டால் காவலரண்களுக்கு 20 எதிரிவீதம் உள்நுழைந்தனர் என்பதை வாசகர்கள் இவ்விடத்தில் நினைவு கொள்ள வேண்டும். இப்போது தீச்சுவாலை சமர்க்களம் எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஒவ்வொரு சிங்கள சிப்பாயினதும் துப்பாக்கிகள் பல நூறு ரவைகளைக் கக்கிக்கொண்டிருக்க, எதிரியின் எறிகணைகள் இடைவிடாது வெடித்துக்கொண்டிருக்க, எதிரியின் பல்குழல் பீரங்கிகள் நிமிடத்திற்கு 40 எறிகணைகளைக் கக்கிக் கொண்டிருக்க எதிரியின் விமானங்கள் இடைவிடாது தாழப்பறந்து குண்டுகளைப் போட்டுக்கொண்டிருக்க, தீச்சுவாலைக்களம் பெரும் பூகம்பத்தின் வடிவாக அக்கினிப் பிழம்பாய் உருவெடுத்து நின்றது.

நாம் எதிர்பார்த்திருந்த பக்கமாக வந்த எதிரிகள் சுட்டு வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தனர். எங்களது துப்பாக்கிகள், எறிகணைகள் குறிதவறாது எதிரியைச் சாய்த்துக் கொண்டிருந்தன. எங்கள் போர் வியூகத்துக்குள் எதிரி நுழைந்து திணறினான். எதிரிக்கு எல்லாப் பக்கமாகத் தாக்குதல் தொடர்ந்தது. வர,வர எதிரி மழைக்குமிழிகள் போலானான். இப்போது எதிரிக்கு பெரும் திகைப்பு. ஓரடி கால் எடுத்து வைக்கவே அஞ்சியவனாக தான் உள்வர நினைத்த இடங்களிலிருந்து பின்வாங்கலானான்.

நாம எதிர்பாராத இடங்களில் எதிரி உள்ளே முன்னேறிக் கொண்டிருந்தான். அங்கும் சண்டை தொடர்ந்தது. எதிரி எதிர்பார்த்த இடங்களினூடாக உட்செல்ல முடியாததினால் புதிதாக சில இடங்களில் முன்னேறினான். எங்குதான் எதிரி பாதை திறக்க முற்பட்ட போதும் புலிவீரர்கள் புயலாக எழுந்து தாக்குதலைத் தொடுத்தனர்.

எதிரியின் 53வது விசேட படையணி கிளாலி தொடக்கம் கண்டிவீதி வரையிலான பிரதேசத்தில் முன்னேறியது. கண்டிவீதி தொட்டு கண்டல் கரைவரை எதிரியின் 55 ஆவது விசேட படையணி முன்னேறியது. இவற்றுடன் வேறு சில படைப்பிரிவுகளும் , கவச வாகனப் படைப்பிரிவுகளுமாக மொத்தத்தில் எதிரி தனது இராணுவ சக்தியின் 90 வீதத்தைப் பயன்படுத்தி 12 ஆயிரம் படைகளுடன் தீச்சுவாலை என்ற நடவடிக்கையைத் தொடங்கினான். அனுபவம் வாய்ந்த பல தளபதிகளின் கட்டளைகளுடன் எதிரி முன்னேறினான்.

கிளாலிப் பக்கமாகவும் கண்டல் கரை பக்கமாகவும் வந்த எதிரியை களத்திலே வீராவேசத்துடன் எதிர்கொண்டனர் புலிகள். களத்திலே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி, சோதியா படையணி இவை மூன்றும் எதிரியை துவம்சம் செய்துகொண்டிருந்தனர். இவற்றுக்கு உதவியாக குட்டிசிறி ஏவு கருவிப் படையணி, கிட்டு கனரக ஆட்லறி ஏவுகருவிப் படையணி தமது துல்லியமான சூட்டாதரவை வழங்கி எதிரியை எந்தத்திசையிலும் கொன்றொழித்துக்கொண்டிருந்தன. இவற்றைவிட பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு களவேலைகளுக்காக் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது.

போரரங்கின் சத்தத்துடனேயே அன்றைய பொழுதின் வினாடிகள் நகர்ந்துகொண்டிருந்தன. சில இடங்களுக்குள் எதிரி உள்நுழைந்த போது தாக்குதல் இன்னும் உச்சத்தையடைந்தது. எமது காவல் நிலையொன்றிலிருந்து சண்டை செய்துகொண்டே நிலைமையை அறிவித்துக்கொண்டிருந்த கப்டன் வான்மீகியின் குரல் திடீரென ஓய்ந்தபோது அவனது வீரச்சாவு உறுதி செய்யப்பட்டிருந்தது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிலை கொண்டிருந்த பிரதேசத்திற்குள் உள்நுழைந்த பலநூறு எதிரிகளின் கதை முடிக்கப்பட்டு எதிர்த்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது. அதேபோல் சோதியா படையணி நிலைகொண்டிருந்த கிளாலிப் பக்கம் வந்த எதிரி தனக்கு ஏற்பட்ட அதிரடியைக் கண்டு திகைத்துப்போனான். அதே நிலையே மாலதி படையணி நிலைகொண்டிருந்த கண்டல் பக்கமாகவும் நிகழ்ந்தது.

இந்திராபுரம் வீதியால் உள்நுழைந்த எதிரி தொடர்ந்து இழப்புக்களுடன் முன்னேறி கட்டளை முகாம் ஒன்றில் முட்டுப்பட்டு அங்கு எதிர்பாராத தாக்குதலை சந்தித்து பெரும் ஆள், ஆயுத இழப்புடன் பின்வாங்கினான். இதேநிலை, அதற்கு அடுத்த எதிரியின் உடைப்புப்பாதையிலும் நிகழ்ந்தது. அந்த இடத்தில்தான் அந்த எதிரியின் நகர்வுப் பாதையில்தான் எதிரி குழு, குழுவாக செத்தும், காயமடைந்தும், கிடந்தான். கிளாலிப் பக்கமாக உள்நுழைந்த எதிரி எதிர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தடுமாறினான்.

மொத்தத்தில் 12 ஆயிரம் படைகளுடனும் பாரிய படைக்கலங்களுடனும் முன்னகர்ந்த சிங்களப்படைகள் புலிகளின் தீரமிகுந்த எதிர்த்தாக்குதலால் நிலை தடுமாறி தங்களின் முன்னேற்ற முயற்சியை . இடைநிறுத்துவதா தொடர்வதா என்று சிந்தித்த வேளையிலும் சண்டை தொடர்ந்து உக்கிரமடைந்தது.

காவலரண்களை எதிரி பிடிப்பதும், பின் நாம் பிடிப்பதுமான உக்கிர சண்டை நடந்தது. எமது நகர்வரண்கள் எதிரியிடம் வீழ்வதும் பின் நாம் அதைப் பிடிப்பதுமாக தீச்சுவாலைச் சண்டையும் நடந்துகொண்டே இருந்தது. சில எதிரிப் படைகள் எங்களது மறைப்பு வேலியைக்கடப்பதற்கு முன்பாகவே செத்து மாண்டு கிடந்தனர். அவர்களது புதிய இயந்திரத் துப்பாக்கிகள் ஒரு ரவையைக் கூடசுடாமல் அவர்களின் கரங்களிலிருந்து விலகிக்கிடந்தது.

எதிரியின் பக்கம் இழப்புக்கள் அதிகரிக்க அதிகரிக்க சண்டையின் போக்கு மாறத் தொடங்கியது. எதிரி எறிகணைகளை எண்ணிக்கையில்லாது ஏவத்தொடங்கினான். இப்போது முகமாலை, பளைப் பிரதேசங்களில் வினாடிக்கு 20 ற்கும் மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்தவண்ணம் இருந்தன. தொடர் விமானத் தாக்குதல்களால் பளை அதிர்ந்து கொண்டிருக்க,

53வது விசேட படைப்பிரிவு முன்னேறியது கிளாலி தொடக்கம் கண்டிவீதி வரையான பகுதியில் எதிர்பாரிய இழப்பைச் சந்தித்தான். எமது காவலரணை ஊடறுத்து ஒரு

➡




கிலோ மீற்றர் தூரம் வரை சென்று அங்கே நிலைகொண்டிருந்த அணிகளிடம் சிக்குண்டு சண்டை செய்யமுடியாமல் பின்வாங்கி காயப்பட்டவர்களையும், இறந்த உடல்க ளையும் விட்டு ஓட்டம் எடுத்தார்கள்.

அந்த நேரத்தில் கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜின் குரல் மிகத் தெளிவாக தொலைத் தொடர்பில் ஒலித்தது. தொடர்ந்து சண்டை செய்யுங்கள் இது வாழ்வா சாவா என்பதைக் கடந்த எமது இனத் தின் மானப்போர் எதிரி நிலைகுலைந்துவிட்டான். தொடர்ந்து தாக்குங்கள் என்று ஆக்ரோசத்துடன் அறிவிப்புச் செய்தார்.

போராளிகள் அனைவரும் நடு வெயிலில் உணவின்றி நீரின்றித் தொடர்ந்து சண்டை செய்து கொண்டிருந்தார்கள். சில போராளிகள் விழுப்புண் அடைந்து இரத்தம் சொட்டச் சொட்டக் களத்திலிருந்து போராடிக்கொண்டிருந்தனர். சிலர் பெரிய காயங்க ளுடனும் வெளிச்செல்லமுடியாமல் காவலரணுக்குள் ளேயே இருந்தனர். இரவு நித்திரை விழிப்பு,தாகம், பசி, கடின உழைப்பு எல்லாம் இருந்தும் போராளிகள் சோர்ந்து போகவில்லை. உற்சாகத்துடன் சண்டை செய்து கொண்டேயிருந்தார்கள். இப்போது எமது விநியோகத்திற்கு தட்டுப்பாடு வரவில்லை. காரணம் எமக்கு தேவையான ஆயுதம் வெடிமருந்து எல்லாமே எதிரியே கொண்டு வந்து எமது ஒவ்வொரு காவலரணுக்கு முன்னும் குவித்திருந்தான். அதனால் தொடர்ந்து சண்டை செய்ய இலகுவாக இருந்தது. எதிரியின் பாரிய இழப்புடனும் அவனது முன்னேற்றம் இலக்கில்லாமல் முடிந்ததுமாக அன்றைய தீச்சுவாலை எதிரியையே தீயிட்டுக் கொழுத்தி முடிவுக்கு வந்தது.

சண்டை முடிந்து ஓய்வாக இருக்கலாம் என எல்லோர் மனதிலும் ஆசைதான் ஆனால்வந்த பகையை முழுதாக அழிக்கவேண்டும் என்ற ஓர்மமும், இழப்புக்களை அகற்றவேண்டிய தேவையும் மீள் ஒழுங்கு படுத்தல்களும் எஞ்சி இருக்கின்றன. 8 மணித்தியாலத்தில் செய்ய வேண்டும் என்பதற்காக களத்திலிருந்த எந்தப்போராளியும் ஓய்வெடுக்காமல், சளைக்காமல் தொடர்ந்து கள வேலைகளை வேகமு டன் செய்து முடித்தனர். இந்த வேளையில் எதிரியின் 55ஆவது படைப்பிரிவு கண்டல் கரைப்பக்கமாக 2 கிலோமீற்றர் நீளம்வரை பிடித்து அதை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தது. கிளாலிப் பக்கமாக சண்டை முடிவுக்கு வந்து கொண்டிருந்தபோது மறு நாள் 2ஆம் திகதி காலை விடிவதற்குள் வேட்டோ சைகளும், தேடொளி வெளிச்சங்களும் எறிகணை வீச்சுக்களுமாக காலை விடிந்தது.

சமர்முனை கண்டல் பக்கம் திசை திரும்பியி ருந்தது. கிளாலிப் பக்கமாக சமர் முனையை எதிர் கொண்டு வெற்றிகொண்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளிகள் மாலதிபடையணியோடு இணைந்து சமர்க்களத்தில் இறங்கினர். முதல் நாள் இழப்பைச் சந்தித்த எதிரி இன்று எம்மை எப்படியும் கொன்றொழித்து வெற்றிபெறவேண்டும் என்று மூர்க்கமாக சண்டையிட்டான்.

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு அடியை யும் மீட்பதற்கு இரத்தத்தையும், சதையையும், உயிரை யும் கொடுக்க வேண்டியதாய் இருந்தது.ஏனெனில் இது புலிகளுக்கும் சிங்களப்படைக ளுக்குமுரிய மானப்போர் மானத் திற்காக உயிரை விடு வது மேலென நினைப்பவர்கள் புலி கள். எனவே விழ விழ எழுந்து போராடினார்கள்.

எதிரியும் நாங்களும் ஒன்று கலந்துவிட்டதனால் சில இடங்களில்கை கலப்புச் சண் டைகளும் நடந்தன. எதிர் எதிரே இருந்தகாவ லரண் ஒன்றில் நாமும் மற்றையதில் எதிரியு மாக இருந்து சண்டை செய்து கொண்டே ருந்தோம். கண்டல் பக்கமாக இருந்த சோ தியா படையணிப் போராளிகளை வழி நடத்திய லெப் கேணல் சுரேந்திரா தனது போரா ளிகளுடன் முதல்நாள் களத்தில் திறமையாகப் போராடி எதிரிகள் பலபேரை சுட்டு வீழ்த்தி அவர்களின் படை பலத்தை சிதைத்து வீரச்சாவடைந் தாள். குறிப்பிட்ட சில காவலரண்களைக் காப்பாற்றுவதற்கு அதனை எதிரியின் கையில் பிடிபடவிடாமலிருப்பதற்காகப் போராளிகள் கடுமையாகச் சமராடினர். எதிரி மிகவும் நெருங்கிவிட்ட நேரத்தில் இனி எதுவும் செய்யமுடியாது என்ற கணத்தில் தங்களுக்கும் சேர்த்து எறிகணைகளை வீழ்த்தச் சொன்ன அற்புதமானவர்களின் தியாகத் தினாலேயே இன்று இந்த மண் நிமிர்ந்து நிற்கிறது.

உண்மையில் விடுதலைப் போரின் வரலாற்றில் இந்தக் களத்தைப்போன்று இறுக்கமானதும் கடுமையா னதுமான சண்டை வரவே இல்லை. ஆக மொத்தத்தில் எதிரிப்படைகளிடம் எந்தளவு இராணுவ சக்தி பலம் இருக்கிறதோ அவை அனைத்தையும் இந்தச் சண்டையில் பயன்படுத்தினான். சண்டை தொடங்கிய நேரம்முதல் இதுவரை ஓய்வே இல்லாத தொடர் வேட்டோசைகளாயே இந்தப் பொழுதுகள் கடந்து கொண்டிருந்தன.

குறிப்பிட்ட ஒரு காவலரணைப் பிடிப்பதற்காக மிகவும் சிரமப்பட்டோம். எதிரி அதை பிடிப்பதும் பின் நாம் அதைப் பிடிப்பதும் மீண்டும் இருபகுதியினரும் மாறி மாறிப் பிடிப்பதாக பதினான்கு முறை மாறி மாறி பிடித்து இறுதியாக நாங்களே அதைப்பிடித்தோம்.

தன்னுடன் சண்டைசெய்து கொண்டே வந்த பெண் போராளியை மறைவிலிருந்து சுட்டுவீழ்த்திய குறிபார்த்து சுடுபவனை எப்படியாவது இன்று சுட்டு வீழ்த்த வேண்டும் என்று பலமுறை முயற்சிசெய்து இறுதியில் அதே எதிரியால் தோளில் காயமடைந்த வேளையிலும் விடாமுயற்சியுடன் சண்டைசெய்து அந்த எதிரியைச் சுட்டு வீழ்த்தினான் ஒரு போராளி.பக்கத்துக் காவலர ணுக்கு எதிரி வந்து விட்டான் என்பதற்காய் எம்மையும் பாராமல் அந்தப் பிரதேசத்தை எறிகணையால் துடைத்து நாசப்படுத்தச் சொல்லி வீரமர ணமடைந்தாள் ஒரு பெண் போராளி.

காயமடைந்து இரத்தம் தோய்ந்து நின்ற கையுடன் இயந்திரத் துப்பாக்கியை இயக்கி பல எதிரியை கொன்றொழித்தான். சகதோழன்.எதிரி தனது காவலரண் வாசல்வரை தன்னிடமிருந்த சுடுகலனால் எதியைச் சுட்டு வீழ்த்தி இறுதியில் ரவைகள் முடிந்தவுடன் கைவசமிருந்த இரண்டு கை எறிகுண்டில்ஒன்றை அவர்களைக் கொல்வதற்காக எறிந்துவிட்டு மற்றைய குண்டை தன்னை அழித்துக்கொள்ள வெடிக்கவைத்த அந்த உறுதிகொள் உறைவிடம் உருச்சிதைந்து இந்த மண்ணை முத்தமிட்டது.

களத்தில் கட்டளையைப் பிறப்பிக்கும் தளபதிகள் சிலர் எதிரியை அழிப்பதற்காய் நேரே சண்டைநடக்கும் இடம்சென்று களமாடி எதிரியை அழித்தனர்.கடுமையான சமர் நடந்த இடத்தை இனிப்பிடிக்க முடியாது என நினைத்த காவலரணை எப்படியென்றாலும் பிடி என்று தளபதி சொன்னதும் அதை நான் பிடித்துத் தருகிறேன் முதலில் எனது தாகத்திற்கு தண்ணீர் அனுப்புங்கள் என்று சண்டையின் கடுமைத் தன்மையை வெயிலின் கொடுமையால் வந்த தாகத்தைக் குறிப்பிட்டான் ஒருவீரன். அவனைப் பொறுத்தவரை எதிரியை எப்படி யும் வெல்லலாம். என்ற துணிவு இருந்தது.

இப்படியாக கடுமை நிறைந்த சமரை இன்றும் உருவாக்கிய போது புலிப்படைகள் அயராது சோர்வில் லாமல் கடுமையாக உழைத்து இன்றைய சண்டை யையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வர நினைத்தபோது எதிரியின் 55ஆவது விசேட படையணி இலேசான சோர்வை இளகிய தன்மையைக் காட்டியது. என்றாலும் மானப் பிரச்சினையால் தொடர்ந்தும் தனது இழப்புக்க ளையும் பொருட்படுத்தாது சண்டையை தொடர்ந்து 26ஆம் திகதி மாலை ஆனபோதும் எதிரி ஏதோ ளதொடர்ந்து போர் செய்யும் மனநிலையில் உள்ளவனா கக்காட்டி வந்தான்.

ஆனால் கண்முன்னே எதிரிக்கு ஏற்பட்ட இழப்பு அவன் விட்டுச்சென்ற தனது சகாக்களின் உடல் அவ னது தொலைத்தொடர்பு, பரிவர்த்தனை சம்பந்த மான ஆய்வின் மனநிலை என்பன இன்று எதிரி இர வோடு இரவாக பின்வாங்கிவிடுவான் என்பதை உறுதிசெய்தது. தீச்சுவாலை தொடங்கியதிலிருந்தே போராளிகள் உணவோ, உறக்கமோ, நீரோ, ஓய்வோ இல்லாமல் சண்டைசெய்து கொண்டே இருந்தனர். எனவே இறுதி வரை போராடுவது என்று முடிவெடுத்து இறந்த தோழர்களின் கனவை நனவாக்கத் தொடர்ந்து போரிட்டனர்.

சில இடங்களில் முன்னேற முடியாமல் எதிரி காப்பிட்டிருந்தான். இப்போது இருள் சூழ்ந்த போதும் சண்டை ஓயவில்லை. சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது. இருந்த நிலைகளை தக்கவைத்துக்கொண்டு தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வந்ததுடன் மறுநா ளைய சண்டைக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டு எதிரியை எதிர்க்கும் வியூகங்களை தீட்டிக்கொண்டும் இருந்து எமது இழப்புக்களை வெளியேற்றி மீள் ஒழுங்குகளைச் செய்தோம்.

இரவோடு இரவாக எதிரியின் பக்கம் வாகனச் சத்தங் கள் கேட்டுகொண்டே இருந்தன. எறிகணைகளையும் எதிரி இடைவிடாது ஏவிக்கொண்டேஇருந்தான். ஏதோ எதிரி செய்யப்போகிறான் என்பது மட்டும் தெரிந்தது. காலைப் பொழுது விடிந்ததும். இடையிடையே ஓரிரு எறிக ணைகள் வெடித்த வாறே இருந்தன. ஆனால் எதி ரியை நோக்கி நாம் முன் னேறிச் சென்ற போ



தும் எதிரி முந் திக் கொண்டவனாய் பின்வாங்கி இருந் தான். எதிரியால் தீச்சு வாலை எனப்பெயரிடப்பட்டு தமி ழீழ மண்ணை ஆக்கிரமித்து பளை, இயக்கச்சி, ஆனை யிறவு என தான் அவமானப்பட்டு விட்டுச் சென்ற நிலத்தை பிடிப்பதற்காக முன்னேறிய அதே தீச்சு வாலை எதிரியை தீக்குளிக்க வைத்தது. அவன் மூட்டிய சிதையில் அவனையே உயிர்விடச்செய்தது. தீச்சுவாலை என்ற பாரிய இரா ணுவ நடவடிக்கையைப் புலிகள் வெற்றிகொண்டதன் பயனாகவே எதிரி இன்றும் விரும்பியோ விரும்பாமலோ தேசக்கரம் நீட்டி சமாதா னப்பாதையில் பயணிக்கின்றான். சமாதானம் போர் ஓய்வென்று நாம் சென்ற போது பலவீனத்தின் சின்ன மாக நினைத்த அதே சிங்கள அரசு இன்று சமாதானத் தின் பங்காளர்களாய் இருக்கிறார்கள் என்றால் தீச்சுவாலை என்றபெரும் தாக்குதலில் சிங்கள தேசம் புலிகளிடம் கற்றுக்கொண்ட விடுதலைப்போர் நியதியின் அத்தியாயம்.


# இரண்டு டிவிசன் படைகள் வந்த வழியே திரும்பின

அக்கினிச்சுவாலை நடவடிக்கையும் முடிவடைந்தது. நான்கு நாட்கள் நடவடிக்கையின் பின்னர் இராணுவத்தின் இரண்டு டிவிசன் படையினரும் தாம் முன்னேற்ற நடவடிக்கையினை ஆரம்பித்த தமது பழைய நிலைகளுக்கே பின்வாங்கித் திரும்பினர்.

எதிரியின் தாக்குதல் மிகவும் உக்கிரம் மிக்கதாகவும் எதிர்பாராத தன்மையைக் கொண்டதாகவும் இருந்தது.

1600 படையினர் இந்த நடவடிக்கையின் போது காயப்பட் டுள்ளார்கள் என்றும், அவர்களில் 225 படையினர் வரை கடுங்கா யங்களுக்குள்ளாகி இருக்கின்றார்கள் என்றும் தெரியவந்தது.

பெரும்பாலான காயங்கள் யாவும் புலிகள் தமது பாதுகாப்பு நிலைகளுக்கு முன்னால் பரவலாகப் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகளாலேயே ஏற்பட்டது என கூறிய மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, படையினர் குறிப்பிட்ட பாதைகள் வழியாகவே கண்ணி வெடிகளை அகற்றிய வண்ணம் முன்னேறிச் சென்று கொண்டிருந்த வேளையில் அப்பகுதிகளில் புலிகளின் ஆட்லறி மற்றும் மோட்டார் எறிக ணைகள் வந்து வெடிக்க ஆரம்பிக்கவே அவர்கள் கண்டபடி சிதறி ஓடித்தப்ப முயன்றனர்.



அந்தவேளையில்த்தான் அவர்கள் கண்ணிவெடிப் பிரதேசங்களில் கால்வைக்க வேண்டியவர்களானார்கள் என்றும் கூறினார். கண்ணிவெடிக்குள் சிக்கியவர்கள் பலர் எஞ்சிய வாழ்நாள் பூராகவும் ஒற்றைக் காலுடன் நடமாட வேண்டியவர்களாகவே உள்ளனர். மேலும் பலர் இருகால்களையும் இழந்தவர்களாகவே உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறிய காயங்களுடன் உள்ள படையினர் விரைவில் போர் முனைக்கு மீண்டும் திரும்புவர் என்றும் கூறப்பட்டது.

இதற்குக் குறைந்தது ஆறு அல்லது ஏழு வாரம் எடுக்கக்கூடும். அதற்குள் அவர்களின் காயங்கள் குணமடைய வேண்டும். இவர்கள் அனைவரும் தொடர்ச்சியாக சிறிலங்கா வான்படை விமானங்கள் மூலம் சிகிச்சைக்கென கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

கிளாலி ஏரிப்பக்கத்தில், கடற்படையின் வடபகுதிக்கான கட்டளை அதிகாரியான கொமடோர் உபாலி ரணவிர படகுகளைப் பணியில் அமர்த்தியிருந்தார்.

காயமுற்ற படையினர் பலர் இப்படகுகள் மூலம் காங்கேசன் துறைக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். அங்கிருந்து பின்னர் அம்புலன்ஸ் வாகனம் மூலம் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனையிறவு வீழ்ச்சி அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட யாழ் மாநகர எல்லைப் பகுதிகள் மீதான தாக்குதல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட பின்னடைவையடுத்து அரசாங்கமானது இராணுவத் தைக்கட்டமைப்பு செய்யவும் நவநவீன ஆயுத தளபாடங்களை இறக்குமதி செய்யவும், அவர்களுக்குப் புதிய முறையிலான பயிற் சிகளை வழங்கவும் பல ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாவினைச் செலவிட்டது.

தேவையான நவீன ஆயுதங்களும் உபகரணங்களும் வந்துசேர்ந்தன. நான்கு மாதங்களுக்கு படையினருக்குத் தீவிரமான மீள் பயிற்சி வழங்கப்பட்டது.இவை அனைத்து வகையான நடவடிக்கை களும் திட்டமிட்ட முறையில் நுணுக்கமாக மேற்கொள்ளப்பட்ட பின்னரேயே இந்த அக்கினிச்சுவாலை நடவடிக்கையின் முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கே முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தின் அரசியல்வாதிகளோ, பாதுகாப்புக்கட்டமைப்பின் உயர் அதிகாரிகளோ படைத்தரப்பினரை எந்தவகையிலும் நிர்ப்பந்திக்க வில்லை என்பதேயாகும்.

பாதுகாப்புச் சபையின் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் கடந்த பல மாதங்களாகவே பாதுகாப்புத் தரப்பினர் தமது தேவைகள் குறித்து விடுக்கும் வேண்டுகோள்கள் அனைத்தையும் நிறைவேற்றி வந்த சனாதிபதி, விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தக் கோரிக்கைக்கு ஒருபோதும் இணங்கப்போவதில்லை என வலியுறுத்திக் கூறியுள்ள போதும், புதிய போர் நடவடிக்கைகளை வலிந்து மேற்கொள்ளுமாறு கட்டளையிடவுமில்லை. எந்த இராணுவ நடவடிக்கைக்கும் ஒரு காலக்கெடுவை விதிக்கவுமில்லை எனவும் தெரியவந்தது.

எனவே இராணுவ நடவடிக்கைகளை இராணுவப் போர்க்களத் தலைமைகளே தீர்மானித்து மேற்கொள்ளும் சுதந்திரத்தை சனாதிபதி படையினருக்கு வழங்கியிருந்தார் என்றே கூறவேண்டும்.

ஏன் இந்த, அக்கினிச் சுவாலை பிழைத்துப் போயிற்று?

ஆனையிறவு சமரின் பின்னர் வடபகுதிப் போர் நிலையைக் கண்காணித்து வரும் எவரும் ஒரு விடயத்தைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தேயிருப்பர்.

அதாவது புலிகள் தமது தற்காப்பு நிலைகளை மிகவும் ஸ்திரமாக வைத்திருப்பதில் ஆழ்ந்த கவனம் கொண்டவர்களாக, அதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவே இருந்தனர்.

அத்துடன் ஆனையிறவை இழந்துவிட்ட படையினர் என்றாவது அதனை மீட்டெடுக்கும் நடவடிக்கை ஒன்றை எடுக்கக் கூடும் எனப் புலிகள் எதிர்பார்த்தே இருந்தனர்.

எனவே தங்களால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தத்தின் 04 மாதகாலப் பகுதிக்குள் அவர்கள் அத்தகைய, ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நடவடிக்கையை படையினர் மேற்கொள்வார்களால் அதனை வெற்றிகொண்டு முறியடிக்கத் தேவையான திட்டமிடல்களை மேற்கொண்டிருப்பர் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

**இக்பால் அத்தாஸ்**

(29, ஏப்ரல் 2001 - சண்டே ரைம்ஸ்)

# ஈராக்கில் முழு அமைதி தோன்றிய பின்பே அமெரிக்கப் படைகள் விலக்கப்படும்!

## - பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டமாக அறிவிப்பு

**ஈராக்கில் முழு அமைதி திரும்பிய பின்னரே அமெரிக்கப் படைகள் அங்கிருந்து திரும்பும் என அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் இதனை நேற்றுத் தெரிவித்தார்.**

ஈராக்கில் சதாமின் ஆட்சியைக் கவிழ்க்க இரண்டாவது வளைகுடா யுத்தம் நடத்தி வெற்றி கண்டுள்ளநிலையில், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட் அரபு நாடுகளுக்கு ஒருவாரகால சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

போரில் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்த அந்நாடுகளுக்கு நேரில் நன்றி தெரிவிக்கும் முகமாக இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், அப்பயணத்தின் போது செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் நிலையான அரசு அமைத்து முழுமையான அமைதி ஏற்படும்வரை இந்நாடுகளில் அமெரிக்கப்படைகள் தொடர்ந்து இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

எண்ணெய் வளம்மிக்க அப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் வருங்கால இராணுவ விவகாரங்கள் பற்றி கலந்துரையாடுவதே அவரது பயணத்தின் முக்கிய நோக்கமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமானிகள் இடைநிறுத்தம்!

சார்ஸ்நோய் தாக்குதலுக்குள்ளான நாடுகளுக்கு எவ்வித முன் நிபந்தனையுமின்றி விமானங்களை ஓட்டிச்செல்ல மறுத்த இந்திய விமானிகள் 12பேர் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதனால் விமானசேவை பாதிப்பின்றி செயற்படுவதற்காக அண்மையில ஓய்வு பெற்ற விமானிகளைப் பணியிலமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஈராக்கில் அமெரிக்க ஆயுதக் களஞ்சிய வெடிவிபத் தில் சிதைவுற்ற பகுதிகளை அகற்றும் அமெரிக்கப் படைவீரர்

# ஐவரிக்கோஸ்ட் – லைபீரிய கூட்டுப்படை எல்லையைக் கண்காணிக்க ஏற்பாடு!

ஐவரிகோஸ்டும் லைபீரியாவும் நேற்று முன்தினம் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இரு நாடுகளின் கூட்டுப் படை ஒன்றை எல்லைப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தும் பொருட்டே இவ் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. பிரான்ஸ் மற்றும் மேற்காபிரிக்கப் படையினரின் ஒத்துழைப்பும் இதற்குப் பெற்றுக்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது.

இரு நாடுகளுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுப்பதே தற்போதைய முக்கிய தேவையென ஐவரிக்கோஸ்டும், லைபீரியாவும் தெரிவித்துள்ளன.

ஐவரிக்கோஸ்ட் தீவிரவாதிகளுக்கு லைபீரியா ஒத்துழைப்பு வழங்குவதாகவும் லைபீரியா தீவிரவாதிகளுக்கு ஐவரிக்கோஸ்ட் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இருநாடுகளும் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க, சீன சனாதிபதிகள் கொரிய நிலைமை பற்றி ஆராய்வு

(வாஷிங்டன்)

வடகொரிய நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க மற்றும் சீன சனாதிபதிகள் தொலைபேசி வாயிலாக உரையாடியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று முடிவுற்ற வடகொரிய, அமெரிக்க, சீன பிரதிநிதிகளுக்கிடையில் பீஜிங்கில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் இந்த தொலைபேசி மூலமான உரையாடல் இடம்பெற்றதாக வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகொரிய நெருக்கடி மற்றும் கொரியாவை அணுவாயுதமற்ற தீப கற்பமாக மாற்றும் குறிக்கோள் என்பவை தொடர்பாக அவ்வேளை விவாதிக்கப்பட்டுள்ளது.



குண்டுவெடிப்பில் கடும் எரிகாயங்களுக்குள்ளான தனது 9 மாதக் குழந்தையை தூக்கிச்செல்லும் ஈராக்கிய தொழிலாளி

# தீவிரவாதிகள் ஊடுருவல்களைத் தடுக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## - அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

இந்தியாவின் காஷ்மீர் பிரதேசத்திற்கு பாகிஸ்தான் ஊடாக தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்க பாகிஸ்தான் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக முன்னர் நாம் வழங்கிய அறிவுறுத்தல்கள் உரியமுறையில் பின்பற்றப்படவில்லையென அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார். இந்திய தொலைக் காட்சி சேவை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். சிலவேளையில்,

தீவிரவாதிகள் ஊடுருவல் தொடர்பாக கடும்போக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது.

சிலவேளைகளில் அப்போக்கில் தளர்வு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பாகிஸ்தான் அதிகாரியொருவர் தெளிவாக விளக்கியுள்ளதாக கொலின் பவல் கூறியுள்ளார்.

இந்தியாவில் ஊடுருவல்களை மேற்கொள்ளும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவியளிப்பதாக இந்தியா குற்றம் சாட்டிவரும் அதே வேளை அதனைப் பாகிஸ்தான் மறுத்துவருகின்றது. அமெரிக்க பிரதிராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச் இரண்டு வாரங்களில் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு விஜயம் செய்தார் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நாட்டை விட்டு வெளியேறும் அனைவருக்கும் சார்ஸ் சோதனை

## -தென்கிழக்காசிய நாடுகள் முடிவு

(கோலாலம்பூர்)

தங்களது நாட்டை விட்டு வெளியேறும் அனைத்து பயணிகளுக்கும் 'சார்ஸ்' வைரஸ் நோய் குறித்த பரிசோதனையை கட்டாயமாக மேற்கொள்ள தென்கிழக்காசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சீனா,ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட 10, உறுப்பினர்கள் அடங்கிய ஆசியான் குழுவின் அமைச்சர்கள், கோலாலம்பூரில் சந்தித்தனர்.

சார்ஸ்,வைரஸ் பாதிப்புள்ள நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு முழுக் கட்டுப்பாடு விதிப்பதில்லை என இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

# 'சார்ஸ்' நோயாளி தப்பியோட்டம்!

(புதுடில்லி)

சார்ஸ் நோயால் தாக்கப்பட்ட தொழிலதிபர் ஒருவர் புதுடில்லிக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

கொங்கொங்கில் வசிக்கும இந்தியத் தொழிலதிபர் மூர்த்தி கடந்த 13ஆம் திகதி வியாபாரம் தொடர்பாக மும்பை வந்தார். அவருக்கு சார்ஸ் இருப்பது தெரியவந்தமையை அடுத்து மும்பையில் கஸ்தூரிபாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து மூர்த்தி வைத்தியசாலையில் இருந்து தப்பி, விமானம் மூலம் டெல்லிக்கு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

# வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் மீதான தற்கொலைத் தாக்குதல் முறியடிப்பு

## -இந்திய படைத்தரப்பு அறிவிப்பு

(புதுடில்லி)

இந்திய காஷ்மீரின் ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் மீது தீவிரவாதிகள தற்கொலைத் தாக்குதலை நடத்தினர். இதில் பெரியளவில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என இந்திய படைத்தரப்பு கூறுகின்றது. அத்தோடு தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் அது கூறுகின்றது.

ஸ்ரீநகரின் மையப் பகுதியிலுள்ள இந்த நிலையத்தினை வெடிமருந்துகள் நிரப்பட்ட கார் மூலம் மோதித் தகர்க்க தீவிரவாதிகள் முயற்சித்துள்ளார்கள்.



தற்கொலை தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட கார் சின்னாபின்னமாகிவிட்டதைக் காண்க.

வெடிமருந்துடன் வானொலி-தொலைக்காட்சி நிலையத்தின் நுழைவாயிலில் கார் மோதி வெடித்துச் சிதறியது. தாக்குதல் நடத்த வந்த தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. 3தீவிரவாதிகளும் 2 படையினரும் இதில் பலியாகினர். மேலும் 7 படையினர் காயமடைந்துள்ளனர்.

மேலும் இத்தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்களை விரைவில் கண்டுபிடித்து அவர்கள் மீது மிகக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணைப்பிரதமர் அத்வானி கூறுயுள்ளார்.



டாக்காவில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் மாலை நேர படகுப் பயணத்திற்கு அரசு தடைவிதித்துள்ளது. இதனை எதிர்த்து படகு உரிமையாளர்கள் தங்களது படகுகளை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

# உலக இந்து மாநாடு 30ஆம் திகதி மன்னாரில்

(மன்னார்)

இரண்டாவது உலக இந்து மாநாடு மன்னாரில் எதிர்வரும் முப்பதாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில் பிரதம அதிதியாக கொழும்பு இராமகிருஸ்ண மிசன்தலைவர் சுவாமி ஆத்ம ஞானநந்தா கலந்துகொள்கின்றார்.

இதில் சிறப்பு விருந்தினராக வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்கின்றார். (மி)


## தொடர்பு கொள்ளவும்



மல்லாகத்தைச் சேர்ந்த சின்னையா ரமேஸ்வரன் கடந்த 12 வருடங்களாக தனது தாயாருடன் தொடர்பு கொள்ளாமல் உள்ளார். தயவு செய்து கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**திருமதி கனகமணி சின்னையா**
**கந்தவில்லா ,**
**மல்லாகம்.**

தொலைபேசி -021-2222710

(2847)


## மாதாந்த சங்கமம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கமம் நடைபெற்றுள்ளது. கடந்த 25ஆம் திகதி அன்று காலை 10.00 மணியளவில் கூளாமுறிப்பு அ.த.க.பாடசாலையில் கூளாமுறிப்பு ஊரக தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சி.ஜெயபாலன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. பொதுச்சுடரினை கூளாமுறிப்பு கிராம சேவையாளர் பாலசுப்பிரமணியம் ஏற்றினார். தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் வான்மதி ஏற்றிவைக்க கருத்துரைகளை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் லோ.சின்னக்கிளி, கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் அ.திருநாவுக்கரசு வழங்கின ர். (05)

## வைத்தியசாலையை புனரமைக்க உதவி!

(முல்லைத்தீவு)

அளம்பில் வைத்தியசாலை புனரமைப்புக்கென நெக்கோட் நிதிஉதவி வழங்க முன்வந்துள்ளது. அதன் அடிப்படையில் அப்பகுதி கிராம அலுவலரின் ஒழுங்கமைப்பில் மக்கள் சிரமதானப் பணிமூலம் 5ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு வேலிகள் அடைக்கப்பட்டுள்ளன. மக்கள் பெரும் ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கணினி தரவுப் பதிவுனர் நியமனம்

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கணினி தரவு பதிவுனர்களாக 45 பேருக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண அமைச்சு அலுவலகங்கள் மற்றும்திணைக்களங்களில் கடமையாற்றவுள்ள இவர்களுக்கான நியமனங்களை மாகாண பொது நிர்வாக அமைச்சு வழங்கியுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மே 05 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச மன்னிப்புச் சபை முன்னாள் தலைவர் வருகை!

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் மாட்டின் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மனிதவுரிமை விடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் - முல்லைத்தீவு

வழக்கு இலக்கம்:-300/2001
தன்மை :- மணநீக்கம்

இராஜ்குமார் இலங்கேஸ்வரி,
இல:- 549, 11ஆம் யூனிற்,
தருமபுரம்.

வழக்காளி.

எதிர்:-

செல்லையா இராஜ்குமார்,
மோட்டார்சைக்கிள் பாட்கடை,
10ஆம் கட்டை, விசுவமடு.

எதிராளி.

## பகிரங்க அறிவித்தல்

### இடைக்காலத்தீர்வை

**2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி தமிழீழ மாவட்ட நீதிமன்ற நீதியாளர் திரு அ. இனியவன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சட்டவாளர் அவர்களும் சமுகமாயிருக்க, எதிராளி முன் அறிவித்தல் ஏதும் இன்றி பலதவணைகளாக மன்றுக்கு சமுகம் தராதமையின் காரணமாக ஒருமுகமாக விளங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது. இதன்படி வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1997ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச் செய்து வழக்காளியும், எதிர்ராளியும் திருமணத்திற்கு முன்னிருந்த நிலையை அடைவார்கள் என்றும் உரிமைக்கோரிக்கைகளின்படி எதிராளி, வழக்காளிக்கு பிரிவினைப்பணமாக ரூபா 50,000/= வையும், திருமணத்தின்போது கொடுத்த பணம், நகைகள், பொருட்களையும் வழங்குவதுடன், வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச் செலவுடன் மன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி தீர்வையாக்கப்பட்டுள்ளது.**

**இவ் இடைக்காலத் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்குள் எதிராளியோ, உரித்துடையோரோ மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளவும் தவறும் பட்சத்தில் குறித்த இடைக்காலத் தீர்வை,முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.**

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
முல்லைத்தீவு

(3204)

# 2 ஆம் ஆண்டு நினைவுகளில்......



காலம் தந்த கரிகாலன் தங்கை
எம் தேசத்தின் விடுதலை நங்கை
களமதில் கனலாக நின்று
கண்ணிவெடி கொண்டு கயவர்படை தகர்த்து
வெற்றித் தலைவன் வழிகாட்டலில்
களம்பல கண்ட வீரவிருட்சம் – லெப் கேணல் நிர்மா
பகைவன் கால் வைத்த இடமெல்லாம் கண்ணிகள் முழங்க
களத்தினில் கனலாக நின்று
எம் தேச உறவுகளுக்காக உழைத்தவளே
எம்தளபதியே நிர்மா
வெற்றித்தலைவனின் சிந்தனை வரிகளை
செயல் வடிவமாய் காட்டிய வீரப்புலியே
ஆனையிறவில் கொடியேற்றவென தீச்சுவாலை பகை
நம்பிக்கையுடன் நிலம் அதிர கால்வைத்த இடமெல்லாம்
உன் பெயர் சொல்லியே கண்ணிகள் முழங்கியது.
அதன் வரலாற்று வெற்றிக்கு வலுச்சேர்த்து
எம் தேசத்தின் விடியலுக்காய் விழிமூடிக் கொண்டாய்
நிர்மா உன் நினைவுடன் தமிழீழத்தைக் காத்திடவே
எம் தேசத்தலைவன் வழியில் ........

**தீச்சுவாலைச் சமரில் வீரகாவியமான அனைத்து மாவீரர் களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

"புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்"

வெற்றிக்கு வித்திட்ட வீரப்புலியே

# லெப்.கேணல் நிர்மா

**லெப் .கேணல் பொன்னம்மான்,**
**கண்ணிவெடிப்பிரிவு.**

(3201)



சிந்தனைக்கு

எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-04-2003

## தொலைவில் நின்று கொண்டு..!

"தற்போதைய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம். இந்தியா உள்ளிட்ட மூன்று நாடுகள் பங்கேற்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அழைக்கப்படுதல் வேண்டும்" என எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையானது நடுநிலை காக்காதவர்களை நீதிபதிகளாக நியமிக்கக் கோருவது போன்றதாகும்.

நோர்வேயின் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மீது எதிர்க்கட்சிகள் அவநம்பிக்கை கொள்வது அவர்களைப் பொறுத்த விடயம். அவர் நடுநிலைமையுடன் செயற்படுகின்றார் என்பது ஒருபுறம் இருக்க –ஆதாரமற்ற விதத்தில் விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களை அவர் சுமத்தாமல் இருப்பது ஒன்றே யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தவும், ஆத்திரம் கொள்ளவும் போதுமானதாகும்.

ஆனால், நோர்வே கண்காணிப்புக் குழுத் தலைவர் மீது குற்றம் சுமத்தும் எதிர்க்கட்சியினர், இந்தியாவைக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறச் செய்ய வேண்டும் எனக்கோருவதானது நோர்வேயைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுத் தலைவரை மட்டுமல்ல, நோர்வேயின் மத்தியஸ்துவ முயற்சியையும் எதிர்க்கின்றனர். சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேற்ற முற்படுகின்றனர் என்பதை வெளிப்படுத்தப்படுகின்றது.

நோர்வேயைச் சமாதான முயற்சிகளில் இருந்து வெளியேற்றும் முயற்சி வெற்றிபெறக் கூடியதோ இல்லையோ இந்தியாவை சமாதான முயற்சியில் இணைத்துக் கொள்ளுதல் என்பது இன்றைய நிலையில் எத்தனை தூரம் சாத்தியப்பாடானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், இந்தியா இச்சமாதான முயற்சிகளில் இருந்து தொலைவில் நிற்பது மட்டுமல்ல, இந்தியா தற்பொழுது கடைப்பிடிக்கும் கொள்கையானது அதனை மத்தியஸ்துவத்திற்குப் பொருத்தப்பாடற்றதாக்கியுள்ளது.

இந்தியா, இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடு செய்வதையோ அன்றி மத்தியஸ்துவம் வகிப்பதையோ விடுதலைப் புலிகள் எதிர்க்கவில்லை. மாறாக, இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவின் ஒத்துழைப்பும், அனுசரணையும் தேவை என்றே விடுதலைப் புலிகள் கோரி வந்துள்ளனர்/ வருகின்றனர். ஆனால், இந்தியாதான் அதனைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது.

ஆனால், தற்பொழுது இந்தியாவைக் கண்காணிப்புக் குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், இந்தியாவிடம் இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டால், இந்தியா இதனைச் சாதகமாகப் பரிசீலிக்கலாம் எனவும் எதிர்க்கட்சிகள் கூறுவதானது; இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் தலையீடு செய்ய முற்படுகின்றதா? என்ற கேள்வியை எழுப்பக் கூடியதொன்றே. ஏனெனில், இவ் எதிர்க்கட்சிகள் தற்பொழுது இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டவையாகவுள்ளன.

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோன்று இந்தியா அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு பங்குபற்ற விளைவதானால், அது எவ்வாறு தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றி இனப்பிரச்சினையில் ஈடுபடுவதெனத் தீர்மானித்ததோ அதேபோன்று விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டையும் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதே நடுநிலைமையாளராக, நீதிபதியாக செயற்படுவதற்கான தகைமையை அது பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டு வரப்பட்டாக வேண்டும். விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி, விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளுதல் அவசியமானதாகும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பட்சத்திலேயே சிறிலங்கா அரசிற்கும் புலிகளுக்கும் இடையிலான நடுநிலை யாளராகச் செயற்பட முடியும்.

இதற்கு மாறாக, இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ள நிலையிலும், சிறிலங்கா அரசிற்கும், அதன் ஆயுதப் படைக்கும் உதவுபவர்களாகவும், இரகசியத் தகவல்களை வழங்குபவர்களாகவும், யுத்த நிறுத்த மீறல்களை தூண்டுவதற்கு உதவுபவர்களாகவும் இருக்கையில் அவர்களைக் கண்காணிப்பாளர்களாகவும், நடுநிலையாளர்களாகவும் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்தியா யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவதை எதிர்க்கட்சிகள் விரும்பலாம். ஆனால், கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுபவர்கள் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரின் நம்பிக்கையை பெறுபவர்களாகவும், இரு தரப்பையும் நடுநிலையுடன், சம அந்தஸ்துடனும், கௌரவத்துடனும் நடத்துபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இந்நிலையில், விடுதலைப்புலிகள் பங்கேற்கும் மாநாடுகள், கூட்டங்களில் பங்கேற்கமாட்டோம், விடுதலைப்புலிகளை இந்தியாவிற்கு வந்துபோக அனுமதிக்கமாட்டோம், புலிகள் பற்றி இந்தியாவில் பேசுவதே சட்டவிரோதமானது எனக் கூறும்/ கருதும் இந்திய அரசு விரும்பினாலும் சரி, விரும்பாதுவிட்டாலும் சரி எவ்வாறு நடுநிலையாளராக மாற முடியும்? எதிர்கட்சிகள் கூறுகின்றன என்பதற்காக எவ்வாறு கண்காணிப்பாளர்களாக ஏற்க முடியும்? ஆனால், குற்றச்சாட்டிற்கு உள்ளாகியுள்ளவரையே பிரதம நீதியரசராக நியமிக்கும் சனாதிபதியின் கட்சியிடம் இருந்து இத்தகைய கோரிக்கை எதிர்பார்க்க முடியாததொன்றல்லத்தான்.

# இலங்கையின் சமாதான முயற்சிகள் இதய சுத்தியுடன் இடம்பெறுகின்றன

## ஜப்பான் விசேட தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் இதய சுத்தியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜப்பானின் விசேட தூதுவர் யசுகிஅகாஷி தெரிவித்துள்ளார்.

"த.இந்து பத்திரிகையில்" ஆசிரியர் ராம் செவ்வி கண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். புலிகள் தொடர்ந்தும் சிறுவர்களைப்படையில் சேர்த்து வருவதாகவும் அவ்வாறு சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவும் ராம்கூறிய போது இது தமக்குக் கிடைத்த ஒரு புதிய தகவல் எனக் கூறிய அகாஷி யுனிசெப் அமைப்பு புலிகளுடன் இணைந்து சிறப்பாக செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பாக யுனிசெப் வடகிழக்கில் அலுவலகங்கள் அமைத்து செயற்படுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புலிகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கம்என்பதால் அந்த இயக்கத்துடன் உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியா அமர முடியாது என ராம் கருத்துக்கூறி கேள்வி கேட்ட போது

இவரை விமர்சித்த அகாஷி ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா உட்பட புலிகள் இயக்கத்தை தடை செய்த பலநாடுகள் கலந்துகொண்டமையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் ஈடுபாட்டைப் புலிகள் விரும்புவதைக் குறிப்பிட்டுக் கருத்து வெளியிட்ட இவர் இலங்கையின் சமாதான முயற்சியில் ஈடுபடுவது குறித்து இந்தியா தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிடுமாறு யாரும் இந்தியாவை வலியுறுத்த வில்லையெனக் கூறியதோடு சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே சர்வதேச நாடுகள் உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# சமஷ்டித் தீர்வை எதிர்ப்பவர்கள் நாட்டைச் சீர்குலைப்பவர்களே!

## -வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

இந்நாட்டில் இனப்பிரச்சினை தீர்வுக்காக முன் வைக்கப்பட்டுள்ள சமஷ்டி முறையை எதிர்ப்பவர்கள் நாட்டின் ஐக்கியம், ஒற்றுமை ஜனநாயகம் என்பவற்றை சீர்குலைக்கும் குழுவினரே என இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார கூறியிருக்கிறார். பத்திரிகையாளருடனான சந்திப்பின்போது மேலும் கூறுகையில்;

தற்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தால் அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். அத்துடன் அது சர்வதேச சக்திகளினதும் அமைப்புகளினதும் பொறுப்புமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

புதிய இடதுசாரி முன்னணித் தலைவரும் மேல் மாகாண சபை அங்கத்தவருமான விக்கிரமபாகு கருணரத்ன அங்கு கூறியதாவது; தற்போதைய அரசு எதிர்க்கட்சித் தலைவர்கள் அங்கம் வகிக்கும் சமாதானப் பேரவை ஒன்று அமைப்பதற்கு தீர்மானித்தது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவ்வாறான பேரவை ஒன்று அமைக்கப்படுமானால் இனவாதிகளினதும் சமாதான எதிரிகளினதும் கொட்டம் தடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# 'சார்ஸ்' சந்தேக நபரொருவர் கொழும்பு வரும்வழியில் மரணம்!

(கொழும்பு)

சார்ஸ் நோய் தொற்றியுள்ளதாக ஏற்பட்ட சந்தேகத்தின் பெயரில் குருநாகல் வைத்தியசாலையிலிருந்து கொழும்பு ஐடியல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பெண் நோயாளி உயிரிழந்துள்ளார்.

கொழும்புக்கு கொண்டுவரும் வழியிலேயே இவர் உயிரிழந்துவிட்டதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர் குருணாகலைச் சேர்ந்தவர். மத்தியகிழக்கிலிருந்து சில தினங்களுக்கு முன்னரே இவர் நாடு திரும்பியதாகவும் குருணாகல் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உதவியளிக்கும் நாடுகள், அமைப்புக்கள் புலிகளின் பங்கேற்பையே விரும்புகின்றன

## – சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

(கொழும்பு)

வடகிழக்கின் அபிவிருத்திக்கு நிதி வழங்க விரும்பும் நாடுகளும் அமைப்புகளும் ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் புலிகள் கலந்துகொள்வதையே விரும்புவதாக சர்வதேச நாணயநிதியம் அறிவித்துள்ளது.

இக்கருத்தை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜிம்மிகாட்டர் தெரிவித்துள்ளார். தற்போது எழுந்துள்ள சிக்கலான சூழ்நிலை விரைவில் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "சுதந்திரக் கோப்பை" டென்னிஸ் போட்டியின் 1ஆவது ஆட்டத்தில் வில்லியம்ஸ் சகோதரிகள் வெற்றி!

அமெரிக்காவில் நடைபெறும் சுதந்திரக் கோப்பைக்கானடென்னிஸ் போட்டியின் முதலாவது ஆட்டத்தில், அந்நாட்டின் வீனஸ் சகோதரிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

அமெரிக்காவின் நசுசுயஸ் அருகே நோயல் எனும் இடத்தில் நடைபெறும் சுதந்திரக் கோப்பை டென்னிஸ் போட்டியில் தொடர்ந்து அக்கோப்பையைக் கைப்பற்றி வந்த அந்நாடு கடந்த ஒருடம் செக் நாட்டிடம் கோப்பையைப் பறி கொடுத்திருந்தது

இந்நிலையில் இம்முறை இக் கோப்பையை மீண்டும் வென்றெடுப்பதற்காக அமெரிக்கா வீனஸ் சகோதரிகளை முதலாவதாக நேற்றுக்களமிறக்கியது.

வீனஸ் வில்லியம் தம்மை எதிர்த்தாடிய செக்குடியரசின் பரினாவையும், செரீனா வில்லியம்ஸ் பருனாவாவேர்வையும் எளிதாகத் தோற்கடித்துள்ளார்கள்.

இதன் மூலம் 2-0 எனும் புள்ளிக் கணக்கில் அமெரிக்கா முன்னிலை பெற்று விளங்குகின்றது.

### சச்சினுக்கு சிகிச்சை

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது வலதுகை விரலில் அறுவைச் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் மும்பையிலிருந்து அமெரிக்கா பயணமாகியுள்ளார்.

டால்ரிமோர்வின் மருத்துவமனையில் இவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படும் என்று கூறப்படுகின்றது

# முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி சுருண்டது!

பங்களாதேஷ் ஹிட்டோவேர்கனில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி பங்களாதேஷ் அணியை ஒரு இனிங்ஸ் 60 ஓட்டங்கள் எனும் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

05 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களுடன் மீண்டும் ஆடத் தொடங்கிய பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்சில் 237 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்கா மேற்படி வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இரு இனிங்ஸ்களிலும் தலா 05 விக்கெட்டுக்களை போல் அடம்ஸ் வீழ்த்தினார்.

222 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த ஜாக் றிடோல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இறுதி ஓட்டவிபரப்படி, தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் 02 விக்கெட் இழப்பிற்கு 470 ஓட்டங்களுடன் ஆட்டத்தை முடித்துக்கொண்டதாக அறிவித்தது.



# துவிச்சக்கரவண்டி ஓட்டத்தில் யாழ். போட்டியாளர்கள் வெற்றி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் ஆனையிறவுப் பெருந்தள அழிப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டும், தீச்சுவலை எதிர்ச்சமரின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் நடத்தப்பட்ட மாபெரும் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டியில் யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் முதல் மூன்று இடங் களையும் பெற்றுள்ளனர்.

நேற்றுக் காலை 7.18 மணிக்கு புளியங்குளம் பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதி யூடாக காலை 10.00 மணிக்கு



பளை தீச்சுவாலை முறியடிப்புச் சமர் மைதானத்தை வந்தடைந்து முதலாவது ஓட்ட வீரர் சரியாக 2 மணி 42 நிமிடத்தில் சென்றடைந்தார். இப்போட்டியில் முதலாம் இடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ம. நிர்மலேஸ்வரன் (இலக்கம்-03), இரண்டாம் இடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயசுதன் (இலக்கம்-01), மூன்றாம் இடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தி. கமல்ராஜ் ஆகியோர் பெற்றனர். மேலும் ஐந்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டியைத் தமி ழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்கள் ஆரம்பித்துவைத்தார். வீதிஒழுங்குகளை தமிழீழ காவல் துறையினர் மேற் கொண்டனர். . இவர்களுக்கான பரிசில்கள் இன்று மாலை வெற்றி விழாவில் வைத்து வழங்கப்படும். (லோ)

---

## அவசரகால....

எதிராகவும், அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தோடும் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே அவரசகால நிலையைப் பிரகடனப்படுத்த அரசாங்கம் யோசித்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

---

## சமாதானச்..

வுள்ளன.

சமாதானச் செயலகம் அரசியல் பணிகளை மட்டுமே இனிமேல் கையாளும் என்றும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குத் தனியான புதிய அமைப்பொன்று உருவாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை சமாதானச் செயலகத்தின் பணிப்பாளராகவும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றிவரும் பேணாட் குணதிலகவை வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிப்பதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிப்பதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

---

## சமாதானப்...

ஒழுங்கான தொடர்பை தாங்கள் வைத்துள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடிய திகதிகள் பற்றி பணிப்பாளர் பேணாட் குணதிலகவும் நோர்வேத் தூதுவர் ஆங் பிளற்சரும் ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன."

---

## எதிர்...

வாதமும் கொண்ட அர்த்தமற்ற செயல் என்று தமிழ்கட்சிகள் கடும் விசனம் தெரிவித்துள்ளன.

போர்நிறுத்தத்தை சீர்குலைத்து சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் நோக்குடனேயே எதிர்கட்சிகள் இந்தக்கோரிக்கையை முன்வைத்திருப்பதாகத் தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

---

## சுட்டுக்கொலை...

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் தனது பிள்ளைகள் மனைவியுடன் தெகிவளைப் பிரதேசத்தில் வசித்து வந்தவர் எனவும் சம்பவ தினம் தனது மனைவியுடன் வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## சில...

சிங்கவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கான பதிற் கடிதமே சில தினங்களில் அனுப்பி வைக்கப்படும் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

## தமிழினம்...

தினம்தினம் யாசித்தவர், சேவையாற்றிய இடங்களிலெல்லாம் தனது முத்திரையைப் பதித்து மனித மனங்களில் ஆழ வேரூன்றியவர்.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் மூலம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியான காலங்களிலெல்லாம் தனது இனத்தின் தன்மானத்திற்காக ஓங்கிக் குரல்கொடுத்தவர். யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த சிங்கள இராணுவம் ஆண்டகையிடம் சென்று தாங்கள் தமிழ்மக்களைக் காப்பாற்றத்தான் வந்துள்ளோம் என்று கூறித் தம்மை வெளிப்படுத்தியபோது மௌனம் சாதித்த ஆண்டகை கடைசியாகக் கூறிய பதில் மானமுள்ள தமிழன் ஒருபோதும் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டான் என்பதாகும். இக்கருத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஆண்டகை தமிழ் மக்களின் மீது கொண்ட நேயமும், விசுவாசமும் அவர்களுக்காகச் சிந்திக்கும் இயல்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒருவரையே இத்தமிழ்ச் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது.

வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் சமாதான சமிக்கையின் மூலம் தமது பிரச்சினைகளின் தீர்வுக்கான அறிகுறிகளைத் தரிசிக்கின்ற இந்நேரத்தில் வழிகாட்டிச் செல்லக்கூடிய ஒரு ஆசானை இழந்து நிற்பது கவலைக்குரியதாகும்.

ஆண்டகையின் இழப்பிற்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அடுத்த..

சந்தித்து ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு , அவர் வலியுறுத்துவார் எனத் தெரியவருகின்றது.

---

## ஒரு தலைப்பட்ச...

வாழ்ந்து வருகின்றன. இரண்டு தசாப்த காலமாக மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தம் அவர்களுக்கு சில நம்பிக்கைகளைக் கொடுத்தது. ஆனால் துரதிஸ்ட வசமாக இதுவரை அப்படியெதுவும் நடைபெறவில்லை. எனவே மக்களிடையே விரக்தியும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னணியிலேயே நாம் எமது இன்றைய நிலையைக் கையாள வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

தாம் அகதி முகாம்களிலே வசிப்பதாகவும் தமது சொந்த இடங்களுக்கு செல்லமுடியாது இருப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். இது அவர்கள் எதிர்நோக்கும் ஓர் அடிப்படைப் பிரச்சினை.

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி படையினர் அகல மறுத்து நிற்கும் வளமான தோட்டப் பகுதிகள் நிறைந்த இடங்களாகும். இவ்வாறாக 47 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மக்கள் திரும்பச் செல்லவில்லை.

இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வரையில் யூனில் ஜப்பானில் நடைபெறும் நிதியுதவி மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை. விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை பிரதமர் அறிவார்.

எமது அரசியல் ஆலோசகரும், பேச்சுவார்த்தைக்குழு தலைவருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கடிதத்திற்கு பிரதமரின் பதிலை எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறாயினும் விடுதலைப்புலிகள் போரை ஆரம்பிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


ஊரைச் சேர்த்து ஆடுவோமே ஒன்டாக— எம்
உள்ளம் வரும் சந்தோசத்தை கொண்டாட..

தீச்சுவாலை எதிர்ச்சமரின் இரண்டாம் ஆண்டு
வெற்றிவிழாவையொட்டிநிதர்சன நிறுவன
தர்மேந்திரா கலையகத்தின்
சிறப்பு வெளியீடான

தீக்குளித்த நேரம்

(ஒலிப்பாடல் தொகுப்பு)

"28-04-2003 பளை நகரில் நடைபெறும் மாபெரும் வெற்றிவிழா மேடையில்
வெளியிடப்பட்டு உலகெங்கும் காற்றலையில் தவழ இருக்கிறது"

பாடலாசிரியர்கள்:– கவிஞர் புதுவை இரத்தினதுரை, வீரா, நாவண்ணன், உதயலட்சுமி, துளசிச்செல்வன், அன்ரனி, முல்லைக்கமல்.

பாடியோர்:– S.G. சாந்தன், குமாரசாமி, திவாகர், ஜெயபாரதி, இசையரசன், இசையமுதன், யுவராஜ், சாகித்யா, குமரன், தமிழ்க்கவி.

பாடலின் பின்னணியில்:–நகுலன், சந்திரஜோதி, சாருமதி.

இசை:– இசைப்பிரியன் ஒலிப்பதிவு:– பவானந்

ஒலிப்பதிவு கூடம் : மகாமினி கலைக்கூடம் யாழ்ப்பாணம்.

ஒழுங்கமைப்பு நிர்வாகம்: திரு.தவா

"பகைவர் மூட்டிய தீயின் சுவாலை
புகையக்கூடவிடவில்லை
இந்தப்புலிகள் தங்கள் விடுதலைக்கனலால்
போரில் வென்றார் நிகரில்லை."
இந்தக் காலப்பதிவை எடுத்தியம்பும்
ஒரு கானப்பதிவு.

உருவாக்கம்
வெளியீடு தர்மேந்திரா கலையகம், நிதர்சனம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

(2281)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.